# உதயன்

விலை ரூபா 6.00

சுடர்:16 வள்ளுவர் ஆண்டு 2031 மார்கழி 24 திங்கட்கிழமை (08-01-2001) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:43


# சுயநிர்ணய உரிமை, சமாதானம் வேண்டி 17 இல் 'பொங்கு தமிழ்' எழுச்சி நிகழ்வுகள்!

## பல்கலைக்கழக சமூகமும் 47 மனிதநேய அமைப்புகளின் ஒன்றியமும் இணைந்து ஏற்பாடு

யாழ்ப்பாணம்,ஜன.8

தமிழ்மக்களின் அபிலாஷை சுயநிர்ணய உரிமையே என்பதை சர்வதேச சமூகத்துக்கு வெளிப்படுத்தவும் சமாதானத்தை வலியுறுத்தவும் யாழ்.பல்கலைக்கழக சமூகமும் யாழ்.மாவட்ட மனிதநேய அமைப்புகளின் ஒன்றியமும் இணைந்து மக்கள் எழுச்சி நிகழ்வு ஒன்றினை நடத்துவது என்று தீர்மானித்துள்ளன.

யாழ்.பல்கலைக்கழக சமூகம், மனிதநேய அமைப்புகளின் ஒன்றியம் ஆகியன இணைந்து நடத்திய கூட்டம் நேற்று யாழ்.மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையப் பணிமனையில் இடம்பெற்றது.

இக்கூட்டத்திலேயே மேற்படி விவகாரம் தொடர்பான தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இக்கூட்டத்தில் எடுக்கப்பட்ட ஏனைய தீர்மானங்களின் விவரம் வருமாறு:-

✪ இந்த மக்கள் எழுச்சி நிகழ்வினை எதிர்வரும் 17 ஆம் திகதி காலை 10.30 மணி தொடக்கம் பகல் 12.30 மணிவரை யாழ்.பல்கலைக்கழக மைதானத்தில் நடத்துதல்.

✪ இந்நிகழ்வில் குடாநாட்டிலுள்ள மக்கள் அனைவரையும் கலந்துகொள்ளச் செய்தல்.

✪ "தமிழர்களின் ஏகோபித்த அபிலாஷை சுயநிர்ணய உரிமை. எனவே தமிழ் தேசிய இனத்தின் சுயநிர்ணய உரிமை, மரபுவழித் தாயகம் போன்றவை அங்கீகரிக்கப்பட வேண்டும். அரசு உடனடியாக யுத்தத்தை நிறுத்தி நோர்வேயின சமாதான முயற்சிகளை முன்னெடுத்து 3 ஆம் தரப்பு மத்தியஸ்தத்துடன் புலிகளுடன் சமாதானப் பேச்சை ஆரம்பிக்க வேண்டும்."-என்ற யாழ்பல்கலைக்கழக சமூகத்தின் கோரிக்கைகளை மனிதநேய அமைப்புக்களின் ஒன்றியமும் வலியுறுத்தி இந்த எழுச்சி நிகழ்வில் கலந்து கொள்ளல்.

(14ஆம் பக்கம் பார்க்க)

# அரசின் சாதகமான பதிலுக்கு நோர்வே காத்திருக்கின்றது!

## அது கிடைத்தால் மட்டுமே சொல்ஹெய்ம் வருவார்

கொழும்பு,ஜனவரி8

**இலங்கை அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் சமாதானப் பேச்சுக்களை ஏற்படுத்துவதற்கு தான் சமர்ப்பித்திருக்கும் முன்மொழிவுகள் தொடர்பாக இலங்கை அரசாங்கத்தின் சாதகமான பதிலை நோர்வே எதிர்பார்த்திருக்கின்றது. அத்தகைய சாதகமான பதில் கிடைத்தால் மட்டுமே இது விடயத்தைக் கையாளும் நோர்வே நாட்டின் விசேட தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் கொழும்பு வருவார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.**

இலங்கை அரசாங்கமும் விடுதலைப் புலிகளும் சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிக்க வசதியாக நோர்வே முன்முயற்சிகளை மேற்கொண்டு வருவது தெரிந்ததே.

இரு தரப்புடனும் நோர்வேயின் விசேட தூதர் எரிக் சொல்ஹெய்ம் பேச்சுக்களை நடத்தி வந்தார்.

பேச்சுக்களை ஆரம்பிப்பது தொடர்பாக சில விடயங்களை அவர் இலங்கை அரசிடம் சமர்ப்பித்துள்ளார்.

அவை தொடர்பாக இலங்கை அரசு இந்த வாரத்தில் சாதகமான பதிலை அனுப்பும் என நோர்வே எதிர்பார்த்திருப்பதாக நோர்வேத் தூதரக வட்டாரங்கள் தெரிவித்தன.

அரசின் சாதகமான பதில் கிடைக்காதுவிட்டால் எரிக் சொல்ஹெய்ம் இலங்கைக்கு விஜயம் மேற்கொள்ள வேண்டிய தேவை ஏற்படாது என்றும் -

அத்தோடு இந்த முயற்சியில் இருந்து விலகும் அறிவிப்பை நோர்வே அடுத்த வாரத்தில் வெளியிட வேண்டிய நிலையும் ஏற்படும் என்றும் -

அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

அதேசமயம் - நோர்வேயின் விசேட தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் இவ்வாரம் இலங்கை வருவார் என்றும் -

(14ஆம் பக்கம் பார்க்க)

## சமாதான முயற்சியில் மெத்தனப் போக்கு!

# அரசைக் கண்டித்து ஐ.தே.கட்சி எம்.பிக்கள் புதனன்று நாடாளுமன்றின் முன் ஆர்ப்பாட்டம்!

கொழும்பு,ஜன.8

யுத்தத்தை நிறுத்தி விடுதலைப் புலிகளுடன் பேச்சுக்களை ஆரம்பிப்பது தொடர்பாக அரசாங்கம் காட்டி வரும் மெத்தனப் போக்கைக் கண்டித்து நாளைமறுதினம் நாடாளுமன்றத்துக்கு முன்பாக ஐ.தே.கட்சியினர் ஆர்ப்பாட்டம் நடத்த இருக்கின்றனர்.

ஐ.தே.கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் இடம்பெறும் இந்த ஆர்ப்பாட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் பொதுமக்களும் பங்குபற்றுவர்.

அன்று காலை முதல் நண்பகல் வரை ஆர்ப்பாட்டம் இடம்பெறும் என்றும் -

அதன் பின்பே கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சபைக்குச் செல்வர் என்றும் - தெரிவிக்கப்பட்டது.

அத்தியாவசியப் பொருள்களின் விலை உயர்வைக் கண்டிப்பதும் இந்த ஆர்ப்பாட்டத்தின் நோக்கங்களில் ஒன்று என்றும் கூறப்பட்டது.

# சிங்கள சங்கமய கட்சி உதயம்

கொழும்பு,ஜன.8

சிஹல உறுமயக் கட்சியில் இருந்து பிரிந்து சென்றவர்கள் நேற்றுப் புதிய கட்சி ஒன்றை அங்குரார்ப்பணம் செய்துள்ளனர்.

சிங்களத் தேசிய சங்கமய என்ற பெயரில் ஆரம்பிக்கப்பட்டுள்ள இந்தப் புதிய கட்சியின் தலைவராக சிஹல உறுமயவின் பழைய தலைவரும் பிரபல சட்டத்தரணியுமான எஸ்.எல்.குணசேகர பதவியேற்றுள்ளார். (உ-3)

## புலிகளின் யுத்தநிறுத்த அறிவிப்பு:

# அரச நாடாளுமன்றக் குழு இன்று கூடி ஆராய்கிறது!

கொழும்பு,ஜன.8

விடுதலைப்புலிகளின் ஒருதலைப்பட்சமான யுத்தநிறுத்தம் மற்றும் சமாதானப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதற்கான வாய்ப்பு ஆகியவை குறித்து பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் நாடாளுமன்றக் குழு இன்று ஆராயவிருக்கின்றது.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா தலைமையில் இன்று இடம்பெறவுள்ள நாடாளுமன்றக் குழுக் கூட்டத்தில்

(14ஆம் பக்கம் பார்க்க)

## கப்பல் பயணிகள் முன் அனுமதியின்றி

# மின் உபகரணங்கள், கஸட் எடுத்துச் செல்வதற்கு தடை!

யாழ்ப்பாணம்,ஜன.8

காங்கேசன்துறைக்கும் - திருகோணமலைக்கும் இடையில் சேவையில் ஈடுபடும் 'லங்கா முடித்த' கப்பலில் பயணம் செய்பவர்கள் மின்சார உபகரணங்கள் மற்றும் வீடியோ, ஓடியோ கஸட்டுக்கள் ஆகியவற்றை எடுத்துச் செல்வது தடைசெய்யப்பட்டுள்ளது.

யாழ்.சிவில் நிர்வாக அலுவலகம் இந்த அறிவிப்பை விடுத்துள்ளது.

இத்தகைய பொருள்களை எடுத்துச் செல்ல விரும்புபவர்கள் யாழ்.சிவில் நிர்வாக அலுவலகத்தில்

(14ஆம் பக்கம் பார்க்க)

# 1,250 பயணிகளுடன் இன்று 'லங்கா முடித்த' புறப்படுகிறது

யாழ்ப்பாணம்,ஜன.8

காங்கேசன்துறையிலிருந்து ஆயிரத்து 250 பயணிகளுடன் 'லங்கா முடித்த' கப்பல் இன்று திருகோணமலைக்குப் புறப்படவிருக்கின்றது.

இந்தக் கப்பலில் பயணம் செய்வதற்காகப் பயணச்சீட்டுப் பெற்றவர்களைப் பயண ஏற்பாடுகளுடன் இன்று காலை 6 மணிக்கு ஸ்ரான்லி வீதியில் உள்ள மணியம் கட்டடத்துக்கு வருமாறு கேட்கப்பட்டுள்ளது.

(14ஆம் பக்கம் பார்க்க)

## உடனடியாக யுத்தத்தை நிறுத்தி புலிகளுடன் பேச்சை ஆரம்பிக்கும்படி

# இலங்கை அரசாங்கத்துக்கு அழுத்தம் கொடுக்கும்படி வாஜ்பாயை நேரில் கோர 10 தமிழ்க்கட்சிகள் முடிவு

யுத்தநிறுத்தத்தை மேற்கொண்டு விடுதலைப் புலிகளுடன் பேச்சுக்களை உடன் ஆரம்பிக்குமாறு இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுக்கும்படி இந்தியப் பிரதமர் வாஜ்பாய் உட்பட முக்கிய இந்தியத் தலைவர்களை நேரில் சந்தித்துக் கோருவதென பத்துத் தமிழ்க்கட்சிகள் கூட்டாக முடிவு செய்துள்ளன.

நேற்றுக் கூடிய பத்துத் தமிழ்க் கட்சிகளின் பிரதிநிதிகளும் இந்தியத் தலைவர்களைச் சந்திப்பது தொடர்பாக ஆராய்ந்தனர். பிரதமர் வாஜ்பாயைச் சந்திப்பதற்குக் கோரும் உத்தியோகபூர்வமான கடிதத்தை எதிர்வரும் 12 ஆம் திகதி இந்தியத் தூதுவரிடம் சமர்ப்பிப்பது எனவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

இந்தியாவில் பிரதமர் வாஜ்பாயை சந்திக்கச் செல்லும் சமயம் எதிர்க்கட்சித் தலைவர் சோனியாகாந்தி உட்பட முக்கிய தலைவர்களையும்

தமிழகத்தில் முதலமைச்சர் மு.கருணாநிதி, முன்னாள் முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா, தமிழ் மாநில காங்கிரஸ் தலைவர் மூப்பனார் உட்பட தமிழக அரசியல் தலைவர்களையும்-

சந்தித்து தமது கோரிக்கையை வலியுறுத்துவதென நேற்றைய கூட்டத்தில தமிழ்க்கட்சிகள் முடிவு செய்தன.

# மீண்டும் ஆரம்பம்

## வணை. தோமஸ் பாலர் பாடசாலை

**சர்வோதயம், குருசோ வீதி,**
**யாழ்ப்பாணம்.**

எமது பாலர் பாடசாலை 02.01.2001 தொடக்கம் ஆரம்பமாகி உள்ளது என்பதனை யாவருக்கும் அறியத் தருகின்றேன்.

அனுபவம் வாய்ந்த ஆசிரியை
திருமதி எ.பேரின்பராணி (82689)

# 31ஆம் நாள் நினைவஞ்சலி



அவனியில் 06.06.1937 — அரன் அடியில் 09.12.2000

அமரர்
## சிவசுப்பிரமணியம் அருணகிரிநாதன்
**(ஓய்வுபெற்ற M.S.O. தபாற் கந்தோர், யாழ்ப்பாணம்)**

பாசத்துடன் எமை வளர்த்து
எம் உயர்வுக்காக மாண்புடன் வாழ்ந்து
வானுறையும் தெய்வமாகிவிட்ட
எங்கள் அப்பாவை
நினைவு கூர்ந்து துதிக்கின்றோம்.

*'கேதீஸ்வரம்'*
*கோணாவளை லேன்,*
*கொக்குவில் கிழக்கு.* (82694) **- குடும்பத்தினர்.**

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



மண்ணில் 22 - 12 - 1926 — விண்ணில் 10 - 12 - 2000

முன்னாள் பிரபல புடைவை வியாபாரி
**வை.கிருஷ்ணசாமி**
அவர்களின் பாசமிகு பாரியார்
## திருமதி கிருஷ்ணசாமி ருக்குமணி

ஆண்டு விக்கிரம கார்த்திகை சதுர்த்தசியில்
ஈண்டு ருக்குமணி கிருஷ்ணசாமி - மாண்புடனே
திருமால் பாதத்தைச் சென்றடைந்தாள் சிறப்புடனே
பெருநாள் அதுவன்றோ பேசு!

நாளை (09.01.2001) செவ்வாய்க்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டிக்கிரியைகளிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் வேண்டுகின்றோம்.

*8/3 பெருமாள் கோயில் மேற்கு வீதி,* **- குடும்பத்தினர்.**
*யாழ்ப்பாணம்.* (82688)

## தையல் பயிலுநருக்கு அழைப்பு

பளைப் பிரதேச செயலக கிராமிய அபிவிருத்திப் பிரிவினால் நடத்தப்பட்ட தையல் பயிற்சி வகுப்பில் கலந்து கொண்டவர்களில் தற்போது வலிகாமம் பகுதியில் தங்கியுள்ள ஏ.சுமதி, எஸ்.வசந்தகுமாரி, எஸ்.சிவரஞ்சனி, ரி.யசோதாதேவி, எஸ்.அம்பிகாபதி ஆகிய பயிலுநர்களை யாழ்ப்பாணம் மானிப்பாய் வீதியிலுள்ள ஈழநாடு நிறுவனக் கட்டடத்தில் இயங்கும் பளைப் பிரதேச செயலகத்திற்கு வருகை தரும்படி பிரதேசச் செயலர் சு.புத்திசிகாமணி கேட்டுள்ளார்.(ஓ-117)

## கூடைப்பந்தாட்ட சுற்றுப்போட்டி

யாழ்மாவட்டப் பாடசாலைகளுக்கு இடையில் யாழ்ப்பாண மாவட்டக் கூடைப்பந்தாட்டச் சங்கம் யாழ்.வை.எம்.சீ.ஏ. அமைப்பின் ஆதரவுடன் நடத்தவிருக்கும் கூடைப் பந்தாட்டச் சுற்றுப் போட்டிக்கான அணி ஒழுங்குத் தெரிவு இன்று மாலை 5.00 மணிக்கு யாழ்.மத்திய கல்லூரியில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. முன்னதாக மாலை 4.30 மணிக்கு அங்கு சங்கத்தின் நிர்வாக சபைக் கூட்டம் நடைபெறும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (உ)

## இலவச மூக்குக் கண்ணாடி

வலி.வடக்கு,ஜன.8

மல்லாகம் கிராம அபிவிருத்திச் சங்கத்தலைவரும் வலி.வடக்குப் பிரதேச சபைத் தலைவருமான அமரர் சு.ஸ்ரீபாஸ்கரனின் பிறந்த நாளை ஒட்டி முந்நூறு பேருக்கு மூக்குக் கண்ணாடிகள் வழங்கப்படவுள்ளன.

வலி.வடக்கில் இருந்து இடம்பெயர்ந்துசென்று வடமராட்சியில் தங்கியுள்ளவர்களுக்கும் மற்றும் வடமராட்சியில் உள்ள வறுமைக் கோட்டின் கீழ் வசிக்கும் மக்களுக்கும் இக் கண்ணாடிகள் வழங்கப்படவுள்ளன. (ஐ-86)

## செயற்றிட்டம் பூர்த்தி

யாழ்ப்பாணம்,ஜன.8

அனலைதீவு வடலூர் அரசினர் தமிழ்க் கலவன் வித்தியாலயத்தில் தீவக கல்வி வலயத்தின் அனுசரணையுடன் இரண்டாயிரம் கல்வி ஆண்டுக்கான செயற்றிட்டம் பூரணமாக நிறைவேற்றப்பட்டுள்ளது.

களப்பயணங்கள், சஞ்சிகைகள், தினங்கள், முக்கிய நிகழ்வுகள், போட்டி நிகழ்ச்சிகள், வரலாற்று நிகழ்வுகள், ஆக்கச் செயற்பாடுகள், பாடப் பாசறைகள், மன்ற, கழகச் செயற்பாடுகள் போன்றவை நிறைவேற்றப்பட்ட செயற்றிட்டங்களாகும். - என்று அதிபர் தமாதவன் தெரிவித்தார். (ஐ-5)


**லஷ்சுமி இணுவில்**
இறுதி நாளாக
**அஜித், சிம்ரன்**
**வாலி**
(82703)
(நீஸ்) காட்சிகள் 10.30, 2.30 (ப.நே.)
அடுத்த வெளியீடு:-
வானத்தைப்போல

**நாகம்ஸ் சுன்னாகம்**
**டைட்டானிக்**
(தமிழ் - நீல்ஸ்)
- டைட்டானிக் என்ற கப்பலுக்கு நடந்த பயங்கரம்.
- இது ஓர் உண்மைச் சம்பவம். இது ஓர் உண்மையான காதல் சம்பவம்.
- உலகில் உள்ள எந்தச் சக்திகளாலும் அவர்கள் இருவரையும் பிரிக்க முடியாது. (82653)

காட்சி நேரங்களில் மாற்றம்
புதிய நேரம்: 10.30, பி.ப. 2.30.

**ராஜா யாழ்ப்பாணம்**
இன்று முதல் குதூகல ஆரம்பம்
**பிரசாந்த், சிம்ரன், ரகுவரன், வையாபுரி** நடிப்பில்
(C/14587)
*பார்த்தேன் ரசித்தேன்*
காட்சிகள்: 10.30, 2.30 (பு.நே.)


# நன்றி கூறுகின்றோம்

தோற்றம் 16 - 10 - 1924



மறைவு 09 - 12 - 2000

## அமரர் கார்த்திகேசு நாகமணி

(ஓய்வுபெற்ற C.W.E. உத்தியோகத்தர் - கொழும்புத்துறை சுவாமியார் வீதியைச் சேர்ந்த பாலாப்பா)

அன்பும் பாசமும் நிறைந்த எனது அப்பாவின் பிரிவுத் துயரத்தில் பங்குகொண்டு, அவரின் மரணச்சடங்கு முதல் அந்தியேட்டி வரையிலும், சகல உதவிகளையும் செய்து எமது துயரத்தில் பகிர்ந்துகொண்ட உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர்கள், மாணவர்கள் அனைவருக்கும் எமது நன்றியினைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

மகன்: **நா.பாலசுப்பிரமணியம் (கனடா),**
மருமகள்: **பா.சுகந்தி (கனடா),**
பேரப்பிள்ளைகள்:
**நிஷாந்தன், நிருத்தனன் (கனடா).**

*தற்காலிக முகவரி:*
*74, சட்டநாதர் வீதி,*
*நல்லூர்.* (82702)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி புஸ்பராணி ஜெயமோகன்
**(L.LB HONS - LONDON)**

சிறம்பன் மலேசியாவைப் பிறப்பிடமாகவும் லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி புஸ்பராணி ஜெயமோகன் 06-01-2001 அன்று லண்டனில் அகாலமரணமடைந்துள்ளார்.

அன்னார் திருநாவுக்கரசு ஜெயமோகனின் அன்பு மனைவியும், நக்கீரன், வைஸ்ணவி (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயாரும், திரு.திருமதி பத்துமலை (ஓய்வுபெற்ற கல்லூரி அதிபர்கள், சிறம்பன் மலேசியா) அவர்களின் அன்பு மகளும், ஜெயச்சந்திரன், சசிதரன் (பொறியியலாளர்கள் கோலாலம்பூர் - மலேசியா) ஆகியோரின் அன்புச் சகோதரியும், தியாகராசா திருநாவுக்கரசு (ஓய்வுபெற்ற தபாலதிபர்) காலஞ்சென்ற திருமதி செல்வநாயகி திருநாவுக்கரசு (ஓய்வுபெற்ற ஆசிரியை) ஆகியோரின் அன்பு மருமகளும், திரு.திருமதி கைலைவாசன் விஜீதா (கொழும்பு), திரு.திருமதி பிரேம்குமார் (ஆசிரிய பயிற்சி கலாசாலை, கோப்பாய்) ஆகியோரின் அன்பு மைத்துனியும், ஆரூரன் (கொழும்பு), சானுஜன் ஆகியோரின் அருமை மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் லண்டனில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

T.JEYAMOHAN
16 A, THE GROVE
GREEN FORD
UB-6 9BY
MIDDLESEX - LONDON
T.P. 2085752387

தகவல்: **மாமனார்**
தி.திருநாவுக்கரசு
ஓய்வு பெற்ற தபாலதிபர்,
*55, கச்சேரி நல்லூர் வீதி,*
*யாழ்ப்பாணம்.*
T.P.2340.

(82683)

## சுந்தரம் சுந்தரலிங்கம்
(லிங்கம் அரிவு ஆலை உரிமையாளர்)

துவாரி வீதி, இமையாணன், உடுப்பிட்டியைச் சேர்ந்த சுந்தரம் சுந்தரலிங்கம் 06-01-2001 அன்று அகால மரணமானார்.

அன்னார் காலஞ்சென்ற சுந்தரம் - சின்னம்மா தம்பதிகளின் அன்புப் புத்திரனும் மகாலட்சுமியின் அன்புக் கணவரும் மேகலா, சசிகலா, விஜிதா, டிலீப்குமார் (கனடா), நிவாணி ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற அப்புத்துரை - இராசம்மா ஆகியோரின் மருமகனும், மகாலட்சுமியின் சகோதரனும், புவனேஸ்வரன், சேதுபதி, யமுனா, செல்வராசா, செல்வரத்தினம், சிறிஸ்கந்தராசா, தயாவதி, றஞ்சனி, தவமலர், சத்தியேந்திரன், கெங்காதரன், பிரதீபன் ஆகியோரின் மாமனாரும், காலஞ்சென்ற C.S.நவரத்தினம் மற்றும் மயில்வாகனம் (மும்பாய்) கனடாவைச் சேர்ந்தவர்களான தவராசா, லோகநாதன், லோகேஸ்வரன், கருணேஸ்வரன் ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08-01-2001) திங்கட்கிழமை பகல் 12 மணியளவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
செ.சத்தியேந்திரன்
மருமகன்

*துவாரி வீதி,*
*உடுப்பிட்டி.* (82687)

## திருமதி கனகசபை விசாலாட்சி

அனலைதீவைப் பிறப்பிடமாகவும் தமிழகம் போரூரை வதிவிடமாகவும் கொண்ட திருமதி கனகசபை விசாலாட்சி அவர்கள் 02.01.2001 அன்று போரூரில் இறைவனடி சேர்ந்தார்.

இவர் அனலைதீவு காலஞ்சென்ற சரவணமுத்து கனகசபையின் அன்பு மனைவியும் திருமதி பரமேஸ்வரி (போரூர்), சண்முகநாதன் (கனடா), இரத்தினசபாபதி (கனடா), காலஞ்சென்ற சுப்பிரமணியம், சிவபாலன் (யாழ்ப்பாணம்) நாகேஸ்வரி (போரூர்), புவனேஸ்வர் (சுவிஸ்), காலஞ்சென்ற விஜயபாலன் ஆகியோரின் அன்புத் தாயாரும் அருமைநாயகம், ச.மனோன்மணி, இ.சாரதாம்பாள், சி.மனோராணி, ப.சோதிலிங்கம், த.புலேந்திரன் ஆகியோரின் பாசமிகு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08-01-2001) திங்கட்கிழமை போரூரில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
க.சிவபாலன் (மகன்)
**இலங்கை வங்கி - யாழ்ப்பாணம்.**

*67, அரசடி வீதி,*
*யாழ்ப்பாணம்.* (82696)

# உதயன்

## மக்கள் தாமே முடிவெடுக்கட்டும்

“கைதடி, நாவற்குழி, மட்டுவில், சாவகச்சேரி ஆகிய பகுதிகளில் உயிர்களை உறிஞ்சவல்ல கண்ணிவெடிகள், மிதிவெடிகள் புதைக்கப்பட்டுள்ளன. எனவே எமது முழுமையான அறிவிப்புக் கிடைக்கும் வரை அங்கு செல்வதைத் தவிர்த்துக் கொள்ளுங்கள்” —இப்படிப் பொதுமக்களைக் கோரியிருக்கின்றார்கள் தமிழீழ விடுதலைப் புலிகள்.

அதேசமயம் தென்மராட்சிப் பகுதியிலிருந்து யுத்த சூழ்நிலை காரணமாக இடம்பெயர்ந்து வாழும் மக்களை அவர்களது சொந்த இடங்களில் மீளக்குடியமர்த்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இது தொடர்பான கூட்டம் ஒன்று நேற்று முன்தினம் வரணியில் 521 ஆவது பிரிகேட் இராணுவத் தளபதி தலைமையில் நடைபெற்றது.

அத்துடன் அரியாலை, துண்டி, பாஷையூரில் நேற்றுத் தொடர்கம் மக்கள் மீளக்குடியமர்வதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக ஈ.பி.டி.பி அமைப்பு அறிவித்துள்ளது.

யுத்த நெருக்கடியில் சிக்கி, வேறு வழியின்றித் தமது உயிரைக் காப்பாற்றுவதற்காக, உடைமைகளையும் சொத்துக்களையும் கைவிட்டு, தமது வாழ்விடங்களை விட்டு வெளியேறிய அப்பாவிப் பொதுமக்களுக்கு தமது சொந்த இடங்களுக்கு எப்படியும் திரும்ப வேண்டும் என்ற அவா — தணியாத தாகம் — மனதில் நிலை கொண்டிருக்கும் என்பது நாம் அனைவரும் உணரத்தக்க ஒரு விடயமே.

ஆனால் நியாயமான அந்த ஆசை — வேணவா — அவர்களைப் பலிக்கடாவாக்கும் திட்டத்துக்கு எண்ணெய் வார்ப்பதாகப் பயன்படுத்தப்பட்டு விடக்கூடாது.

போரில் ஈடுபட்டிருக்கும் இரு தரப்பினதும் இணக்கமின்றி யுத்த முனைக்கு மத்தியில் நிலைகொள்ளச் செய்வது தற்கொலைக்கு ஒப்பானதாகிவிடும். இது மக்களுக்கு நன்கு புரியும்.

என்றாலும் —

தமது சொந்த இடங்களுக்குத் திரும்ப வேண்டும் என்ற மக்களின் இயல்பான ஆசையை — விருப்பத்தை — ஏதேனும் தரப்பு, தனது இராணுவ நோக்கங்களுக்காகவோ அல்லது அரசியல் லாபங்களுக்காகவோ — அப்பாவி மக்களின் உயிர்களைப் பற்றிச் சிந்திக்காமல்— தவறாகப் பயன்படுத்தி விடக்கூடாது.

தென்மராட்சியின் பெரும்பகுதி இராணுவக் கட்டுப்பாட்டில் இருந்து விடுதலைப் புலிகளின் கைக்கு மாறும் பெரும்பீதி நிலை கடந்த ஆண்டு மே மாதம் உருவானபோது — மே 18 ஆம் திகதி — பலாலி இராணுவத் தலைமையகம் பொதுமக்களுக்கு விடுத்த மிக முக்கிய செய்திக் குறிப்பு ஒன்றில தென்மராட்சி மக்களை தமது சொந்த இடங்களை விட்டு வெளியேறி வடமராட்சி அல்லது வலிகாமத்தில் பாதுகாப்பாகப் போய் இருக்கும்படி கேட்டுக் கொண்டதை இங்கு நினைவுபடுத்த விரும்புகின்றோம்.

மக்கள் தாம் திரும்பிச் செல்வதற்கு பாதுகாப்பான சூழ்நிலை அங்கு உள்ளது என்று தாமே உணரும்வரை, அங்கு செல்வது தமக்கு உயிராபத்தில்லை என்று கருதி அவர்களே முடிவு எடுக்கும் வரை அவர்களைப் பலவந்தமாகவோ சுயாதீனமாகவோ இட்டுக்கட்டி அனுப்ப முயற்சிகள் எடுக்கப்படக்கூடாது என வேண்டுகிறோம்.

### கன்னட அமைப்புகளின் எதிர்ப்பால்

# நெடுமாறனுக்கான விழா பெங்களூரில் ஒத்திவைப்பு

இந்தியாவின் கர்நாடக மாநிலத் தலைநகர் பெங்களூரில் தமிழர் தேசிய இயக்கத் தலைவர் பழ. நெடுமாறனுக்கு நடத்தப்படவிருந்த பாராட்டு விழா காலவரையறையின்றி ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

சந்தன மரக்கடத்தல்காரன் வீரப்பனால் கடத்தப்பட்டுப் பணயக் கைதியாக வைக்கப்பட்டிருந்த மூத்த கன்னட நடிகர் ராஜ்குமாரை விடுவிக்க உதவியதற்காக பழ. நெடுமாறன் உட்பட வீரப்பனிடம் தூது சென்றவர்களுக்குப் பாராட்டு விழா நடத்த ராஜ்குமார் ரசிகர் மன்றத்தினர் தீர்மானித்திருந்தனர்.

பெங்களூரில் நடைபெறவிருந்த இந்த விழாவுக்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வந்தன.

அந்தச்சமயத்தில் பாராட்டு விழாவுக்குத் தடைவிதிக்கும்படி தீவிர கன்னடவாத அமைப்புகள் மாநில அரசிடம் கோரிக்கை விடுக்க ஆரம்பித்தன.

தமக்கு நடத்தப்படவுள்ள பாராட்டு விழா கர்நாடகத்தில் வாழும் மக்களிடையே இன மோதல்கள் மூளக் காரணமாக இருக்குமானால் அதில் தான் கலந்துகொள்ளப் போவதில்லை என்று பழ. நெடுமாறன் ஏற்கனவே அறிவித்திருந்தார்.

இந்த நிலையில் நேற்று நடைபெறவிருந்த பாராட்டு விழா காலவரையறையின்றி ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக ஏற்பாட்டாளர்கள் கடைசி நேரத்தில் அறிவித்தனர். (ஒ-6)

### சமாதான முயற்சிகளை எதிர்த்து

# மேற்குக் கரைப் பிரதேசத்தில் பலஸ்தீனர்கள் ஆர்ப்பாட்டம்

இஸ்ரேலுடனான சமாதான முயற்சிகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்து மேற்குக் கரைப் பிரதேசத்தில் பலஸ்தீனர்கள் ஆர்ப்பாட்டங்களை நடத்தினர்.

ரமழா, துர்காரா, நமேஸ் உட்படப் பல நகரங்களில் நடைபெற்ற ஆர்ப்பாட்ட ஊர்வலங்களில் நூற்றுக்கணக்கான பலஸ்தீனர்கள் கலந்துகொண்டனர்.

சமதா நகரில் நடைபெற்ற ஊர்வலத்தில் கலந்துகொண்டவர்கள் இஸ்ரேலிய இராணுவத்தினர் மீது கல்லெறிந்து தாக்கியதாகவும் —

தாக்கியவர்கள் மீது இஸ்ரேலியப் படையினர் சுட்டதில் பலர் படுகாயமடைந்ததாகவும் —

அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இஸ்ரேலுடன் சமாதானப் பேச்சுக்களை நடத்துவதை விட்டு போர் மூலம் பலஸ்தீனத் தனி நாடு உருவாக்கப்பட வேண்டும் என்று ஆர்ப்பாட்டங்களில் கலந்துகொண்டவர்கள் கருத்துத் தெரிவித்ததாக ஏஜென்சிச் செய்திகள் கூறின.

இதே சமயம், பலஸ்தீனத் தலைவர்களில் ஒருவரான ரயீஸ்ஷா கிளின்ரனின் மேற்பார்வையில் இடம் பெறும் சமாதான முயற்சியின் போது பலஸ்தீனர்களுக்குப் பாதகமான பல விடயங்கள் கவனிக்கப்படவேண்டியுள்ளதாகக் கூறியுள்ளார்.

அமெரிக்காவின் புதிய அதிபராகப் பதவியேற்கும் ஜோர்ஜ் - டபிள்யூ புஷ்ஷிடம் சிக்கலாகிவிட்ட மத்திய கிழக்குச் சமாதான முயற்சிகளையோ, மேற்காசியாவில் ஆபத்தான பிரச்சினைகள் வெடிக்கக் கூடிய நிலைவரத்தையோ கையாளும் உரிமையை வழங்க முடியாது என்றும் ரபீஸ்ஷா தெரிவித்தார். (9-6)

### மேற்காசிய வன்முறைகள் குறித்து

# இஸ்ரேலியரும் பலஸ்தீனரும் சி.ஐ.ஏ தலைமையில் பேச்சு!

கெய்ரோ, ஜன. 8

அமெரிக்காவின் மத்திய புலனாய்வு நிறுவன அதிகாரிகளின் தலைமையில் பலஸ்தீன, இஸ்ரேலியப் பாதுகாப்புத் துறைகளின் மூத்த அதிகாரிகள் மேற்காசிய மோதல்களை முடிவுக்குக் கொண்டுவருவது குறித்த ஆலோசனைக் கூட்டம் நேற்று ஆரம்பமானது.

எகிப்தியத் தலைநகர் கெய்ரோவில் நடைபெறும் இச்சந்திப்பில் மேற்குக் கரை மற்றும் காஸாவில் பலஸ்தீனர்களுக்கும் இஸ்ரேலியப் படைகளுக்கும் இடையே இடம்பெற்றுவரும் மோதல்களைத் தடுப்பதற்கான ஒப்பந்தம் ஒன்றை ஏற்படுத்துவது தொடர்பாக ஆலோசிக்கப்படுகிறது.

இதற்கிடையில் அமெரிக்க அதிபர் பில்கிளின்ரனின் இறுதிக் கட்ட மேற்காசியச் சமாதான முயற்சிகள் குறித்துப் பலஸ்தீனத் தலைவர் யசீர் அரபாத் ஜோர்டானில் மன்னர் அப்துல்லாவுடன் கலந்தாலோசித்ததாகப் பலஸ்தீனப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

(ஒ-6)

# இந்தியாவில் நிலவும் கடுங்குளிரில் 103பேர் உடல்விறைத்துமரணம்!

இந்தியாவின் வடக்கு-கிழக்கு மாநிலங்களில் நிலவும் கடுங்குளிரினால் 103 பேர் உடல் விறைத்து உயிரிழந்துள்ளனர்.

இதைத்தவிர குளிரினால் ஏற்படும் நோய்களால் பீடிக்கப்பட்டு 335பேர் இறந்துள்ளனர்.

கடுங்குளிர் நிலவும் மாநிலங்களில் 4 பாகை செல்சியஸ் வெப்பநிலையே உள்ளது.

இதேசமயம் காஷ்மீர் பகுதியில் வெப்பநிலை மைனாஸ் பாகைக்குக்கீழ் உள்ள போதும், இயற்கையாகவே குளிர்ப்பிரதேசமாக அங்கு வாழும் மக்கள் பாதிக்கப்படவில்லை.

ஆனால் கோடைகாலத்தில் கடும்வெப்பம் தாக்கும் வடக்கு-கிழக்கு மாநிலங்களில் வாழும் மக்கள் தற்போது நிலவும் குளிரினால் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த மாநிலங்களில் வீதியோரங்களில் வாழும் வறிய மக்களுக்கே குளிரால் உடல் விறைத்து உயிரிழக்கும் நிலை ஏற்பட்டு வருகிறது.

## அதிகாரிகள் கைது!

இந்தியாவில், திரையுலகினர் உட்பட பணக்காரர்களின் வீட்டுக்குள் மத்தியப் புலனாய்வு அதிகாரிகள்போல் நுழைந்து கொள்ளையடித்து வந்த 5 பேர் கொண்ட கும்பலை டில்லிப் போலீஸார் கைது செய்தனர்.

இவர்களிடமிருந்து இருதுப்பாக்கிகள், கத்திகள், போலி அடையாள அட்டைகள் ஆகியவை கைப்பற்றப்பட்டன.

## நாளை

மார்கழி 25

செவ்வாய்க்கிழமை

திதி: பூரணை

பின் இரவு 3.04 வரை.

நட்சத்திரம்: திருவாதிரை

மாலை 5.18 வரை.

பூரணை விரதம்

சுபநேரம்: 11.02— 12.32

ராகுகாலம் 03.32 — 5.02

(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

### உதயவாக்கு

உழைப்பு எந்த மனிதனையும் ஏமாற்றுவதில்லை; மனிதன்தான் உழைப்பை ஏமாற்றுகிறான்.

# இந்தியாவின் முயற்சிக்கு பாக்.வரவேற்பு

இஸ்லாமாபாத். ஜன. 8

காஷ்மீர்த் தீவிரவாத இயக்கங்களின் கூட்டமைப்பான குரியத் மாநாடு கட்சிப் பிரதிநிதிகள் பாகிஸ்தான் சென்று பேச்சு நடத்த இந்தியா அனுமதியளித்துள்ளதைப் பாகிஸ்தானிய அரசு வரவேற்றுள்ளது.

பாகிஸ்தான் சென்று அங்குள்ள அரசியல் தலைவர்கள் மற்றும் தீவிரவாத இயக்கங்கள் ஆகியவற்றுடன் அமைதிக்கான பேச்சுக்களை நடத்தவுள்ள குரியத் மாநாடு கட்சிப் பிரதிநிதிகளுக்கு இந்தியா கடவுச் சீட்டு வழங்கியுள்ளது. தெரிந்ததே.

# ஐரோப்பாவில் பறவைகளுக்கு ஆபத்து

ஐரோப்பிய நாடுகளில்மேற்கொள்ளப்படும் தீவிர விவசாய நடவடிக்கைகளால் பறவை இனங்கள் அழிந்துபோகும் ஆபத்து உருவாகியுள்ளதாக பிரிட்டிஷ் சூழலியலாளர்கள் எச்சரித்துள்ளனர்.

## உலக அரங்கில்

கடந்த 30 ஆண்டுகளில் களை நாசனிகள், பூச்சிகொல்லிகள் ஆகியவற்றின் அதிக உபயோகத்தால் பல பறவையினங்களின் அளவிலும், எண்ணிக்கையிலும்கவலையை ஏற்படுத்தும் மாற்றங்கள் உண்டாகியுள்ளதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

# இந்தியப் போர் விமானம் வெள்ளோட்டம்

முற்று முழுதாக இந்தியாவிலேயே தயாரிக்கப்பட்ட எல். ரி. இலகுரகப் போர் விமானம் பெங்களூர் விமானப் படைத்தளத்தில் இருந்து வெள்ளோட்டம் விடப்பட்டது.

சர்வதேச அளவில் புகழ் பெற்றுள்ள 5 விமான ரகங்களில் ஒன்றான எல். ரி.ரக விமானங்கள் அடுத்த 5 ஆண்டுகளில் இந்திய விமானப் படையில் சேர்த்துக் கொள்ளப்படவுள்ளன.

# நம்பி வந்த நோயாளிகளை கொன்ற பிரிட்டிஷ் மருத்துவர்

## விஷ ஊசி ஏற்றினாராம்

லண்டன், ஜன. 8

பிரிட்டிஷ் மருத்துவர் ஒருவர் 24 ஆண்டு கால மருத்துவ சேவையின் போது 300க்கும் மேற்பட்டவர்களை விஷ ஊசி ஏற்றிக் கொன்றுள்ளது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இது தொடர்பாக பிரிட்டிஷ் அரசு வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது.

மன்செஸ்டரில் மருத்துவராகப் பணியாற்றி வந்தவர் கரோல்ட் ஷிப்மன். இவரிடம் சிகிச்சைக்குச் செல்லும் பல நோயாளிகள் மரணமடைந்தனர்.

ஒரு மருத்துவரிடம் சிகிச்சை பெறுபவர்களில் சாதாரணமாக இறக்கக் கூடியவர்களை விடப் பிக்க கூடுதலானவர்கள் இறந்ததையடுத்து ஷிப்மனின் சிகிச்சைகள் குறித்து பொலிஸார் விசாரணை மேற்கொண்டனர்.

அதில், பொருதைப்பொருள் பழக்கத்தைக் கொண்டிருந்த ஷிப்மன் கடந்த ஆண்டில் 15 நடுத்தர வயதுப் பெண் நோயாளிகளை விஷ ஊசி ஏற்றிக் கொன்றிருப்பது கண்டுபிடிக்கப்பட்டு வழக்குத் தொடரப்பட்டது.

வழக்கு விசாரணையின் முடிவில் 15 ஆயுள் தண்டனைகள் வழங்கப்பட்டு ஷிப்மன் சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்.

தொடர்ந்து விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார் ஷிப்மன் நோயாளிகளைக் கொல்வதன் மூலம் குரூர திருப்தி அடைந்து வந்ததாகவும் அவரது 24 ஆண்டு கால மருத்துவ சேவையில் 300க்கும் மேற்பட்டவர்களைக் கொலை செய்துள்ளது கண்டு பிடிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளனர். (ஓ-6)

## சின்னஞ்சிறு விளம்பரம்

### புறொயிலர் விற்பனைக்கு

சுத்தம் செய்யப்பட்ட **BAIRAHA FARM** புறொயிலர் இறைச்சிக் கோழி, **CHICKEN SAUSAGES, CHICKEN MEAT BALLS** எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம். தொடர்பு: 145, நவீன சந்தை, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.**T.P.2868.** (81780)

கொழும்பிலிருந்து சுத்தம் செய்யப்பட்ட வஜிராபாம் புறொயிலர் இறைச்சிக் கோழி **KEELS,** சொசேஜஸ் என்பன விமானம் மூலம் தினந்தோறும் இறக்குமதி செய்யப்பட்டு மொத்தமாகவும், சில்லறையாகவும் விற்பனையாகின்றன. எந்நேரமும் பெற்றுக் கொள்ளலாம். தொடர்பு: **T**.கரன், ஆஸ்பத்திரி வீதி, கஸ்தூரியார் வீதிச் சந்திக்கடை. (82579)

### விற்பனைக்கு

நஷனல் **N.V 7500** டெக் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 213 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். **T.P. 2863.** (82545)

### வீடு விற்பனைக்கு

சண்டிலிப்பாய் தபாற்கந்தோருக்கு அண்மையாக **7 1/2** நிலப்பரப்புக் காணி (கல் வீடும், கிணறும் கொண்டது) விற்பனைக்கு உண்டு. தொடர்பு: **E**.நடேசன், சட்டத்தரணியும் பிரசித்த நொத்தாரிசும். அளவெட்டி தெற்கு, அளவெட்டி. (82418)

சங்கானை பழைய தபாற்கந்தோர் வீதியில் மல்லாகம் றோட்டிற்கு அண்மையில் வீடு கிணற்றுடன் **6 1/2** நிலப்பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 79, வேம்படி வீதி, யாழ்ப்பாணம். **T.P.077330559, 077 330042 (82673)**

### தேவை

ஊர்காவற்றுறையில் மிக விரைவில் ஆரம்பமாகவுள்ள பிரமாண்டமான தனியார் கல்வி நிறுவனம் ஒன்றின் பயன்பாட்டுக்கென மேசை வாங்குகள் அவசரம் தேவைப்படுகின்றது. தொடர்புகளுக்கு யாழ்நகரில் த.தனேந்திரன் 83, ஆஸ்பத்திரி வீதி, கொட்டடி, வேலணையில் மணி, வங்களாவடிச் சந்தி. (82669)

### மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1964ஆம ஆண்டு, உத்திரட்டாதி நட்சத்திரம், சவுதிஅரேபியாவில் தொழில் புரியும் மணமகனுக்கு தகுந்த மணமகளைத் தாயார் எதிர்பார்க்கின்றார். சீதனம் பேசித் தீர்த்துக் கொள்ளலாம். தொடர்பு: விள.இல.1175 மே/பா உதயன். (82676)

### தவறிவிட்டது

கல்லடி லேன், நுணாவில கிழக்கு, சாவகச்சேரி என்னும் முகவரியைச் சேர்ந்த குழந்தைவேலு சபாபதிப் பிள்ளை என்பவரது தேசிய அடையாள அட்டை (353501496V), விசேட அடையாள அட்டை(091002832), தொழில் அடையாள அட்டை (ஸ்ரீ விக்கினேஸ்வரா ஸ்ரோர்ஸ், சாவகச்சேரி) என்பன (07-01-2001) நேற்று பெருமாள் கோயிலடியில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து றூபா பன்முக வர்த்தகம், **104A**, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் ஒப்படைத்து தவவும். சன்மானம் வழங்கப்படும். (82675)

### இலக்கியக் கட்டுரைகள்

'வீடற்றவன்' நாவலுக்கும் 'பொருளோ பொருள்' நாடகத்துக்கும் 12 சிறுகதைகளுக்கும் விளக்கங்கள் எழுதியிருக்கிறார். அராலியூர் ந. சுந்தரம்பிள்ளை.க.பொ.த. (சாதாரண, உயர்தர) மாணவர்கள் தமிழ் இலக்கியம் கற்க உதவக்கூடிய 38 கட்டுரைகள். (82680)


**கணக்கீடு**

**A/L 2001**

**DAY CLASS**

ஆரம்பம்:- 09.01.2001

செவ்.1.30 - 3.00 (ப.நே)

திரு.S.D.J.சுதர்ஷன்

**I.B.S.**

கோவில் வீதி

(றெயில்வே கடவை அருகில்)

(82679)



**யங்றோயல்ஸ்**

**சயன்ஸ் அக்கடமி**

நெல்லியடி

வடமராட்சி மாணவர்க்காக

**கலை, வர்த்தகப் பிரிவு**

**A/L 2001, 2002**

**2001 DAY CLASS**

**2003**

தமிழ் - செல்வி பங்கயம்

இ.நாகரிகம் - செல்வி சுதாமதி

இ.சமயம் - செல்வி சுதாமதி

பொருளியல் - திரு. விக்கி

திரு. M.C. சுதாகரன்

கணக்கியல் - திரு. தவா,

திரு. சத்தி

அளவையியல் - திரு. தர்மதேவா

**ஏனைய சகல பாடங்களும் 10.01.2001க்கு முன் பதிவு செய்யவும்.**

(82601)


## படிப்பு வட்ட கலந்துரையாடல

யாழ்ப்பாணம்,ஜன.8

சமூக விஞ்ஞானப் படிப்புவட்டம் நடத்தும் 'சர்வாகரும் மாக்சியரும்' (உலகாயதம் பற்றிய வரலாற்று நோக்கு) என்ற தலைப்பிலான கலந்துரையாடல் நாளை செவ்வாய்க் கிழமை காலை 9மணிக்கு திருநெல்வேலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் நடைபெறவுள்ளது.

இ.முருகையன் தலைமையில் நடைபெறும் இந்தக் கலந்துரையாடலில் தொடக்கவுரையை பேராசிரியர் சோ.கிருஷ்ணராசா நிகழ்த்தவுள்ளார். (ஐ-5)

## விண்ணப்பம் சேகரிப்பு

யாழ்ப்பாணம், ஜன.8

யாழ்ப்பாணம் - திருமறைக்கலாமன்றத்தினால் நடத்தப்படும் சங்கீத, நடன, மிருதங்க, ஓர்கன், ஓவிய வகுப்புக்களுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

எதிர்வரும் 10 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பங்களை அனுப்பி வைக்குமாறு திருமறைக் கலாமன்ற நிர்வாகிகள் தெரிவித்துள்ளனர். (ஐ-5-17)

## சுடர் ஒளி

ஆதரவுடன்

யாழ்ப்பாண விஞ்ஞானச் சங்க

தூய விஞ்ஞானப் பிரிவினர்

யாழ். றோட்டரிக் கழகத்துடன்

இணைந்து நடத்தும்

பாடசாலை மாணவர்களுக்கான

## இளம் ஆய்வாளர் விருது

**இளம் ஆய்வாளர் விருதினைப் பெறுவதற்குரிய விதிகள்:**

* க.பொ.த. (உயர்தர) விஞ்ஞானப் பிரிவு மாணவர்கள் மட்டும் பங்குகொள்ளலாம்.
* பங்குபற்றுவோர் பாடசாலையை விட்டு விலகாத மாணவர்களாக இருத்தல் வேண்டும் (இரண்டாம் முறை பரீட்சைக்குத் தோற்றுவோரும் இதில் பங்குகொள்ளலாம்).
* தரப்பட்ட விண்ணப்பப்படிவம் தயாரிக்கப்பட்டு பூர்த்திசெய்யப்பட்டு அதிபரினால் உறுதிப்படுத்தப்பட்டு *ஜனவரி மாதம் 15 ஆம் திகதிக்கு* முன்னர் கிடைக்குமாறு பின்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

**செயலாளர்,**
**யாழ்ப்பாண விஞ்ஞானச் சங்கம்,**
**தூய விஞ்ஞானப் பிரிவு,**
**தாவரவியல்துறை,**
**யாழ்.பல்கலைக்கழகம்.**

**மாதிரி விண்ணப்பப்படிவம்**

பாடசாலை:-
மாணவனது முழுப்பெயர்:-
பிறந்ததிகதி:-
க.பொ.த.(உயர்தர) பரீட்சைக்குத் தோற்றிய/தோற்றும் ஆண்டு:-

..................................................
விண்ணப்பதாரியின் ஒப்பம்

மேற்படி.................... எமது பாடசாலையில் தற்சமயம் விஞ்ஞானப்பிரிவு மாணவராக உள்ளார் என்பதை உறுதிப்படுத்துகிறேன்.
..........................
திகதி:- அதிபரின் ஒப்பம்

* விண்ணப்பித்த மாணவர்களுக்கு எவ்விடயம் சம்பந்தமாக செயற்றிட்டம் மேற்கொள்ள வேண்டும் என்பது பற்றிய தொனிப் பொருளும் (உயிரியல், இரசாயனவியல், பௌதிகவியல் ஆகிய பாடங்களில்) அதற்குரிய அறிவுறுத்தல்களும் காலக்கிரமத்தில் அனுப்பி வைக்கப்படும்.
* தூய விஞ்ஞானப் பிரிவினரின் அறிவுறுத்தல்களுக்கமைய ஒவ்வொரு மாணவனும் தனித்தனியே செயற்றிட்டத்தை மேற்கொண்டு அதன் பெறுபேறுகளை செயற்றிட்ட அறிக்கையாக அறிவுறுத்தல்கள் கிடைத்து ஆறு கிழமைகளுக்குள் சமர்ப்பிக்க வேண்டும்.
* செயற்றிட்ட அறிக்கையானது மாணவரினால் எழுதப்பட்டு விஞ்ஞானப்பிரிவு ஆசிரியர்களினால் உறுதிப்படுத்தப்பட்டு அதிபரினால் அத்தாட்சிப்படுத்தப்பட்டு பாடசாலை இலச்சினையுடன் அனுப்பிவைக்கப்படல் வேண்டும்.
* மிகச் சிறப்புடைய செயற்றிட்ட அறிக்கைக்கு வெற்றிக் கேடயமும் சிறப்புடையவற்றிற்கு சான்றிதழ்களும் வழங்கப்படும்.

(C/14674)


## தேவை

மும்மொழியும் தெரிந்த பில் கிளாக் தேவை.
அனுபவம் உள்ளவர்கள் விரும்பத்தக்கது.

தொடர்பு:-

**ஹோட்டல் றொலெக்ஸ்**

*340, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.*

(82684)


## வதிவிட மாற்றம்

நவாலி வடக்கு, மானிப்பாயில் தற்காலிகமாக வசித்துவந்த J/312 மட்டுவில் மத்தி, J/305 கல்வயல் கிராம உத்தியோகத்தரான

**க.வாமதேவன்**

ஆகிய நான் இன்று தொடக்கம்

29/1, கொழும்புத்துறை வீதி, சுண்டிக்குளி

என்னும் முகவரியில் வசிக்கிறேன் என்பதை எமது கிராம பிரிவு மக்களுக்கு அறியத் தருகின்றேன்.

க.வாமதேவன்.
*கிராம உத்தியோகத்தர்.*

(c/14687)

உ

தொல்புரம் வழக்கம்பரையில் வீற்றிருந்து அருள்பாலிக்கும்

## ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலய சித்திரத் திருமஞ்ச வெள்ளோட்ட விழா

**அம்பிகை அடியார்களே!**

அன்னை போல் அருள் சுரந்து நாமுய்ய அருள் பாலிக்கும் தொல்புரம் வழக்கம்பரை முத்துமாரி அம்பாளினதும், புதிதாக அராலியூர் விஸ்வபிரம்மஸ்ரீ சிற்பக்கலைஞர்

**திரு.சின்னத்தம்பி அமரசிங்கம்**

ஸ்தபதியின் குழுவினராலும் சிற்பக் கலை மிளிர உருப்பெற்ற **திருமஞ்ச வெள்ளோட்ட விழா** நாளை (09.01,2001) செவ்வாய்க்கிழமை மு.ப.10.00 மணிக்கு நடைபெற திருவருள் பாலித்துள்ளது. அத்துடன் சிற்பக்கலைஞர்கள் கௌரவிக்கப்பட்டு அன்று பிற்பகல் 2.00 மணிக்கு அம்பாள் புதுமஞ்சத்தில் எழுந்தருளி வீதியுலா வரும் காட்சியையும் கண்டு அம்பிகை அடியார்கள் அனைவரும் அருள் பெற்று ஏகும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம்
*திருமஞ்சப் புனரமைப்பாளர்கள்.*

*வழக்கம்பரை,*
*தொல்புரம்.*

(82605)

## ஓடிமறைந்ததுவோ மூன்றாண்டு

எங்கள் குடும்பத் தலைவி

தோற்றம் 13 - 03 - 1948



மறைவு 11 - 01 - 1998

**செல்லையா மகாலட்சுமி**

(புங்குடுதீவு 8ஆம் வட்டாரம்)

திதி: 08-01-2001

ஆண்டுகள் மூன்று ஓடி மறையலாம்
அம்மாவே! எங்கள் நெஞ்சினில் வாழ்கின்றீர்கள்
வேண்டுதல் உனக்காக நாளும் புரிகின்றோம்
விம்மி அழுது புலம்பியிங்கே வாழ்கின்றோம்
நீண்ட காலங்கள் கடந்து செல்லாமல்
நீங்கள் எங்களுடன் என்றும் வாழ்வீர்கள்
ஆண்டவன் அடியினில் சேர்ந்து வாழும் அம்மாவே
ஆத்ம சாந்திக்காக எங்களின் பிரார்த்தனைகள்.

பிரிவால் துயருறும்:
கணவர் (செல்லையா),
பிள்ளைகள்
சுதர்சினி, வாகீசன்
ஸ்ரீரெங்கநாதன்
டினேஸ்குமார (பிரான்ஸ்), காந்தரூபி
யசிந்தாயினி (பிரான்ஸ்: College Leon Gamvtta)

*153, நாவலர் வீதி,*
*யாழ்ப்பாணம்.*

நாதன் சைவ உணவகம்,
*87, மானிப்பாய் வீதி,*
*(வைத்தீஸ்வரச் சந்தி),*
*யாழ்ப்பாணம்.*

(82678)

# உப்பள ஊழியர்களுக்கான சம்பள நிலுவை கிடைக்கும்

## அமைச்சர் டக்ளஸ் நடவடிக்கை

யாழ்ப்பாணம்,ஜன.8

வடபிராந்திய உப்பள ஊழியர்களின் சம்பள நிலுவைப் பணத்தை வழங்குவதற்குரிய நடவடிக்கையை வடக்கு அபிவிருத்தி, புனரமைப்பு, புனர்வாழ்வு, வடக்கு - கிழக்கு தமிழ் விவகார அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மேற்கொண்டுள்ளார்.

வடபிராந்திய உப்பள ஊழியர்கள் சேவை நலச் சங்கத்தின் உறுப்பினர்கள் குழுவொன்று அண்மையில் அமைச்சரை யாழ். அலுவலகத்தில் சந்தித்துத் தமது சம்பளம் மற்றும் அலுவலகம் ஆகியவற்றின் பிரச்சினை தொடர்பாகக் கலந்துரையாடியதை அடுத்தே அமைச்சர் மேற்படி நடவடிக்கையை எடுத்துள்ளார்.

இந்தக் கலந்துரையாடல் கடந்த வியாழக்கிழமை ஈ.பி.டி.பியின் யாழ். அலுவலகத்தில் நடைபெற்றது. இதில் யாழ்.அரசாங்க அதிபர் க.சண்முகநாதன் மற்றும் லங்கா உப்பு நிறுவன உத்தியோகத்தர்கள் சங்கத்தின் உறுப்பினர்கள் ஆகியோரர் கலந்து கொண்டனர்.

இக்கலந்துரையாடலின் பயனாக தொடர்ந்து ஐந்து வருடங்கள் இயங்காதிருந்த வடபிராந்திய அலுவலகத்தை இயக்குவதற்கு அமைச்சர் அனுமதியை வழங்கியுள்ளார்.(ஐ-10)



மிகவும் பின்தங்கிய கிராமங்களில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட சாவற்காடு, நவாலி, சாந்தை, காக்கைதீவு, முள்ளி ஆகிய பகுதி வறிய மக்களுக்கு மானிப்பாய் தொகுதி ஈ.பி.டி.பி. அமைப்பாளர் வெலிச்சோர் அன்ரன் ஜோன்சன் பால்மா பைக்கற்றுக்களை வழங்குவதனை படத்தில் காணலாம். அருகில் முன்னாள் செயலாளர் க.சிவநேசன், பிரதேசசபைச் செயலாளர் பி. விக்டர் ஆகியோர் உள்ளனர். *(படம்: வலி.தென்மேற்குச் செய்தியாளர்)*

# நன்கு முற்றி விளைவதற்கு முன் உள்ளூர் உ.கிழங்கு அறுவடை

## சந்தை வாய்ப்புக் கருதி விவசாயிகள் மும்முரம்

அரியாலை,ஜன.8

யாழ்.மாவட்டத்தில் பருவ காலம் முந்தியே உள்ளூர் உருளைக் கிழங்கை விவசாயிகள் சிலர் அறுவடை செய்து வருகின்றனர்.

அறுவடை செய்யப்படும் உருளைக்கிழங்கு சந்தைக்கு வரத் தொடங்கியுள்ளது.

திருநெல்வேலிச் சந்தைக்கு எடுத்து வரப்படும் இந்த உள்ளூர் உருளைக்கிழங்கு கிலோ நூறு ரூபாவுக்கு மேல் விற்கப்படுகின்றது. பருமன் குறைந்து சிறிய அளவில் காணப்படும் இந்த உருளைக் கிழங்கை பருவகாலம் வரும் முன்னரே அதன் சந்தை வாய்ப்புக்கருதி விவசாயிகள் அறுவடை செய்து வருவதாகத் தெரிவிக்கப்பட்டது.

## நீர் விநியோக திட்டவேலைகள்

யாழ்ப்பாணம்,ஜன.8

கட்டுதூ புதிய நீர் விநியோகத் திட்டவேலைகள் ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனத்தினால் விரைவாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்த குடி தண்ணீர் விநியோகத் திட்டத்தின் மூலம் 250 குடும்பங்கள் பயனடையவுள்ளன.

குடிதண்ணீர் பெறுவதற்காக சுமார் ஆறு கிலோ மீற்றர் தூரம் சென்று வந்த இப்பகுதி மக்கள் இத் திட்டத்தினால் தமது கிராமத்திலேயே குடி தண்ணீரைப் பெற வசதி ஏற்பட்டுள்ளது.

கட்டுதூவில் இருந்து 12 கிலோ மீற்றர் தூரத்தில் உள்ள மண்டானில் இருந்து குழாய் மூலம் இந்த நீர் விநியோகம் இடம்பெறவுள்ளது. (ஐ-5)



அண்மையில் கந்தரோடை சுகவாழ்வு நிலையத்தினரால் அளவெட்டி அருணோதயாக் கல்லூரியில் கொண்டாடப்பட்ட சிறுவர் தினத்தை ஒட்டிய கலை நிகழ்ச்சியில் ஒரு காட்சி. (ஐ-86)

*(படம்:வலி. வடக்கு செய்தியாளர்)*

## பருத்தித்துறை தொலைபேசி

# பரிவர்த்தனை நிலையத்தை தரமுயர்த்தக் கோரிக்கை!

பருத்தித்துறை தொலைபேசிப் பரிவர்த்தனை நிலையத்தை ஒரு தன்னியக்க பரிவர்த்தனை நிலையமாக தரமுயர்த்த வேண்டும்.

இவ்வாறு வடமராட்சி தொலைபேசி உரிமையாளர் சங்கம் வடக்கு அபிவிருத்தி புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் வடக்கு கிழக்கு தமிழ் விவகார அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தாவுக்கு அனுப்பி வைத்துள்ள மகஜரில் கோரிக்கை விடுத்துள்ளது.

அந்த மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

கடந்த சில மாதங்களாக 'ரெலிக் கொம்' நிறுவனம் வடமராட்சி மக்களுக்கான சேவையை வேண்டுமென்றே புறக்கணிப்பது போல் தெரிகின்றது.

வடமராட்சி கம்பித் தொலைபேசி பாவனையாளர்கள் '9' இலக்க வசதி மூலம் யாழ்.நகர் உட்பட பிறமாவட்டங்களுக்கான அழைப்புக்களைப் பெற்று வந்தார்கள். இவ்வசதி கடந்த ஒக்ரோபர் 20ஆம் திகதியில் இருந்து செயலிழந்துள்ளது.

இதுபற்றி பிராந்தியத் தலைவருக்கு தெரிவிக்கப்பட்ட போது இதைத் திருத்துவதற்கான கருவியின் பெறுமதி 60ஆயிரம் ரூபா எனவும் ஓரிரு வாரங்களில் திருத்தப்பட்டு விடும் என்றும் கூறப்பட்டது. ஆனால் நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

இந்நிலை தொடர்வதால் 'ரெலிக் கொம்' நிறுவனத்துக்கு வருமான வீழ்ச்சி ஏற்படுவதுடன் எங்களுக்கு வழங்கப்பட்ட சேவையை நாம் அனுபவிப்பதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளதாகக் கருதவேண்டியுள்ளது.

பருத்தித்துறை தொலைபேசி பரிவர்த்தனை நிலையத்தில் இயங்கும் பரிவர்த்தனை இயந்திரம் மிகவும் பழமை வாய்ந்தது.

இது அடிக்கடி பழுதடைவதால் பாவனையாளர்களுக்கு மிகவும் சிரமம் ஏற்படுகின்றது.

இந்தப் பரிவர்த்தனை நிலையத்தை தரம் உயர்த்தும் படி 'ரெலிக் கொம்' நிறுவனத்தை நிர்ப்பந்திக்குமாறு வேண்டுகின்றோம்.

கம்பி இல்லாத தொலைபேசி (மோட்டோ றோலா) மூலம் பாவனையாளர்கள் அதன் முழுப்பயனையும் அடைய முடியவில்லை: ஓர் அழைப்பைப் பெறுவதற்குத் தொடர்ச்சியாக 10-15 நிமிடங்கள் வரை இலக்கத்தை அழுத்த வேண்டியுள்ளது.

யாழ்ப்பாணம் உட்பட பிறமாவட்டங்களில் உள்ளவர்கள் 'மோட்டோ றோலா' தொலைபேசி வசதியுள்ள ஒரு பாவனையாளருடன் தொடர்பு கொள்ள முடியாத நிலையில் உள்ளார்கள்.

'மோட்டோ றோலா' தொலைபேசி சேவையை சீர்செய்யாது மேலும் மேலும் புதிய மோட்டோ றோலா' சேவையை வழங்குவது புத்திசாலித்தனமல்ல. இப்படி அந்த மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-5)

## திருவாசகவிழா

யாழ்ப்பாணம்,ஜன.8

இணுவில் சைவத்திருநெறிக் கழகம் நடத்தும் திருவாசக விழா நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு இ.தயானந்தன் தலைமையில் சிவகாமி அம்மன் ஆலய அன்னதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

விழா ஆரம்பத்தில் திருவாசக நூலும், மணிவாசகர் திருவுருவப் படமும் தேவஸ்தானத்தில் இருந்து பல்லக்கில் பவனியாக விழா மண்டபத்திற்கு எடுத்து வரப்படும்.

இந்த நிகழ்வில் சிவமகாலிங்கம், ஆறு.திருமுருகன் ஆகியோரின் சிறப்புச் சொற்பொழிவுகளும், பட்டி மண்டபமும் இடம்பெறவுள்ளன. (ஐ-5)

## குடாநாட்டில் பஸ் கட்டணம் அதிகரிப்பு

யாழ்ப்பாணம், ஜன.8

நாட்டில் எரிபொருள் விலை யேற்றத்தைத் தொடர்ந்து தனியார் மற்றும் போக்குவரத்துச் சபை பஸ் கட்டணங்களும் நேற்று ஞாயிறு தொடக்கம் அதிகரிக்கப்பட்டுள்ள

இதன்படி வடபிராந்திய போக்குவரத்துச் சபை பஸ்களின் கட்டணங்களும் குடாநாட்டில் அதிகரிக்கப்பட்டுள்ளதாக வடபிராந்திய போக்குவரத்துச் சபை பொதுமுகாமையாளர் வி.எஸ்.சொக்கலிங்கம் தெரிவித்தார். (ம-க)

## பணியாளர் கௌரவிப்பு

யாழ்.பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் 25 வருடகாலப் பணியைப் பூர்த்தி செய்த மற்றும் ஒரு பணியாளர் சங்க நிர்வாகத்தினால் பாராட்டிக் கௌரவிக்கப்பட்டார்.

சங்கத்தின் சபா மண்டபத்தில் நேற்று முன்தினம் சனிக்கிழமை சங்கத்தலைவர் சீ.வீகே சிவஞானம் தலைமையில் நடைபெற்ற இயக்குனர் சபைக் கூட்டத்தில் கிளை முகாமையாளரான முத்துக்குமார் என்ற பணியாளருக்கு மலர்மாலை அணிவித்துப் பாராட்டுப் பத்திரமும் வழங்கி கௌரவிக்கப்பட்டது. (ஐ-17)

## நாய்களுக்கு தடுப்பூசி

நெல்லியடி.ஜன.8

துன்னாலை பொதுச் சுகாதார பரிசோதகர் பிரிவிலுள்ள கரவெட்டி கிழக்கு காட்டுப்புலம், கிழவிதோட்டம்பகுதியில் உள்ள வளர்ப்பு நாய்களுக்கு எதிர்வரும் 11 ஆம் திகதி வியாழக்கிழமை காலை தடுப்பு ஊசி செலுத்தப்படவிருக்கிறது. (ஐ-109)

# மல்லாகம் கிராம சங்கத்தில் புத்தகக் கண்காட்சி நடக்கும்

வலி.வடக்கு,ஜன.8

சர்வதேச புத்தகக் கண்காட்சி தினத்தை ஒட்டி மல்லாகம் கிராம அபிவிருத்திச் சங்கமும் புத்தகக் கண்காட்சி ஒன்றை நடத்த ஏற்பாடு செய்துள்ளது.

இப்புத்தகக் கண்காட்சியில் உள்நாடு, வெளிநாடுகளைச் சேர்ந்த பல்வேறு வகையான புத்தகங்களும் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளன.

இதேவேளை-

உள்நாட்டு புத்தக வெளியீட்டாளர்கள், எழுத்தாளர்கள் தமது ஆக்கங்களையும் இந்தக் கண்காட்சியில் பார்வைக்கு வைக்க விரும்பினால் மல்லாகம் கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவருடன் தொடர்பு கொள்ளும்படி கேட்கப்பட்டுள்ளது.

கண்காட்சியில் புத்தக விற்பனை நிலையமும் அமைக்கப்பட்டுள்ளது.

## அம்பாந்தோட்டைப் பகுதியில்

# கொள்ளையர்கள் இருவரும் பொலீஸாரும் சமரில் பலி!

கொழும்பு,ஜன.8

அம்பாந்தோட்டை மாவட்டத்தின் வீரகெட்டியவில் வியாழனன்று இரவு நடைபெற்ற துப்பாக்கிச்சமரில் பொலீஸ்காரர் ஒருவரும் கொள்ளையர் இருவரும் கொல்லப்பட்டனர்.

பெலியத்தைப் பொலீஸ் குழுவினர் வீரகெட்டியவில் முக்கிய கொள்ளைக் கோஷ்டியை எதிர்கொண்டனர். பொலீஸார் மீது ஒருவர் சுட அவரும் திருப்பிச் சுட்டார். இதன் போது ஒரு பொலீஸாரும் அவர்களின் காவலில் வைக்கப்பட்டிருந்த சந்தேக நபர்கள் இருவரும் கொல்லப்பட்டனர். மோசமான காயங்களுக்கு உள்ளாகியிருந்த மூன்றாவது சந்தேக நபர் அவசரஅவசரமாக மாத்தறை வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டார். வழியில் ஆயுதபாணிகள் சிலர் அம்புலன்ஸ வண்டியை மறித்து அதனுள்ளிருந்த காயமடைந்தவரை இழுத்துச் சுட்டுக் கொன்றனர்.

இச்சம்பவம் இரவு 10 மணியளவில் நடந்ததாக தென்பிராந்திய பிரதி பொலீஸ்மா அதிபர் எம்.சீவரத்தினம் தெரிவித்தார். (ஐ)

# வாக்காளர் இடாப்புகள் திருத்தப்படுகின்றன

யாழ்ப்பாணம்,ஜன.8

வாக்காளர் இடாப்புகள் திருத்தும் பணிகள் யாழ். மாவட்ட தேர்தல் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

ஏற்கனவே கிராம அலுவலர்களிடமிருந்து இத்திணைக்களத்தினால் கோரப்பட்டுப் பெறப்பட்ட படிவங்கள் சீர்செய்யப்பட்டு வருவதாக உதவித் தேர்தல் ஆணையாளர் தெரிவித்தார்.

இதேவேளை -

வாக்காளர் இடாப்பில் பெயர் திருத்தங்கள் தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்டுள்ள விண்ணப்பங்களும் பரிசீலிக்கப்பட்டு வருகின்றன.

வாக்காளர் இடாப்பில் பெயர் திருத்தம் செய்பவர்களின் விவரங்களை 10ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறும் உதவித் தேர்தல் ஆணையாளர் கேட்டுள்ளார். (ஐ-5)

# காவலரண்கள் தாக்கி அழிப்பு

கொழும்பு,ஜன.8

நாகர் கோயில் மற்றும் நுணாவில் பகுதிகளில் அமைந்திருந்த விடுதலைப் புலிகளின் 6 காவலரண்களை படையினர் கடந்த வெள்ளியன்று முற்றாகத் தாக்கி அழித்துள்ளதாக விசேட ஊடக தகவல் நிலையம் அறிவித்துள்ளது.

இந்தத் தாக்குதல்களின் போது படையினர் தரப்பில் 5 சிப்பாய்கள் காயமடைந்ததாகவும் புலிகள் தரப்பில் பலர் கொல்லப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை -

தனங்கிளப்புப் பகுதியில் 160 கண்ணிவெடிகளையும் அரியாலை மற்றும் குப்பிளான் பகுதிகளில் இருந்தும் இராணுவ உபகரணங்களையும் படையினர் கைப்பற்றியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் காலை வெற்றிலைக் கேணிப் பகுதியில் உணவுப் பொருள்களை ஏற்றிச்சென்ற விடுதலைப் புலிகளின் படகு ஒன்றையும் கடற்படையினர் தாக்கிச் சேதப்படுத்தியதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# கூட்டுறவுச் சங்கக் கடையில் சிகரெட், மீன்ரின்கள் திருட்டு

தென்மராட்சி,ஜன.8.

பாதுகாப்புப் படையினரின் முகாமுக்கு அண்மையில் உள்ள பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிளை ஒன்றில் சிகரெட், மீன்ரின்கள் திருட்டுப் போயுள்ளன.

சாவகச்சேரி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் சண்டிலிப்பாய் கிளையிலேயே கடந்த வியாழக்கிழமை இரவு பொருள்கள் களவு போயுள்ளதாகக் கிளை முகாமையாளர் சங்கத் தலைமை அலுவலகத்தில் முறையிட்டுள்ளார்.

சம்பவதினம் பகல் கொள்வனவு செய்யப்பட்டு முகாமையாளரின் மேசையில் மீன்ரின்கள், சிகரெட் பைக்கெற்றுகள் அடுக்கி வைக்கப்பட்டிருந்ததாகவும் -

அன்று இரவு கதவு சங்கிலியால் இணைத்துப்பூட்டப்பட்டிருந்த போதும் இடைவெளியூடாக தடி ஒன்றினால் பொருள்கள் தட்டி எடுக்கப்பட்டுள்ளதாகவும் -

கூறப்படுகிறது.


சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரிக்கு அருகில் உள்ள மேற்படி கிளைக் கடைக்கு அண்மையில் படையினரின் முகாம் அமைந்துள்ள போதும் இத் துணிகரத் திருட்டு நிகழ்ந்துள்ளது குறிப்பிடத்தக்கது. (ஒ-117)

## மாதா கோயில் பலத்த சேதம்

அரியாலை,ஜன.8

கொழும்புத்துறை பரிசுத்த செபமாலை மாதா கோயிலும் பலத்த சேதமடைந்து காணப்படுகிறது.

ஆலயத்தில் இருந்த தளபாடங்களும் காணாமல் போயுள்ளன. ஆலய வளவில் இருந்த பயன்தரும் மரங்களும் தறிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-17)



# ஈழத்துச் சிதம்பரத் தேர்த்

## (காரைநகர் சிவ

## 08-0 -20



## சிதம்பரத்தைத் தரிசித்து இகபர சுகம் எய்துக!

ஈழத்துச் சிதம்பரம் என அழைக்கப்படும் காரைநகர் சிவன்கோயிலில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற திருவெம்பாவை உற்சவத்தில் சிறப்பு உற்சவமாகிய பஞ்சரத பவனி இன்று (08-01-2001) காலை நடைபெறுகின்றது. தில்லைக் கூத்தன் சிவகாமசுந்தரி சமேதராக ஏனைய பரிவார மூர்த்தங்களோடு பஞ்சரதத்தில் ஆரோகணித்து திருவீதி உலாவரும் அழகொழுகும் காட்சியினை அடியார்கள் யாவரும் தரிசனம் செய்து இகபர சுகம் எய்த வேண்டுமென இறைவனைப் பிரார்த்தித்து ஆசி கூறுகின்றேன்.

"வாய்த்தது நம்தமக்கு இது ஒரு பிறவி மதித்திடுமின்"

பிரதம சிவாச்சாரியார்
**சிவப்பிரம்மஸ்ரீ வி.ஈஸ்வரக்குருக்கள்,**
*ஈழத்துச் சிதம்பர தேவஸ்தானம்.*

## மலர் அமைப்பு: பாரதி

## காண்போர் உள்ளங்களை பரவசமாக்கும் பஞ்சரத பவனி



திருமூலரால் சிவபூமி எனப் போற்றப்பட்ட இலங்கைத் திருநாட்டின் வடபால் அமைந்துள்ள யாழ்.நங்கையின சிரசாய் மேல் பால் அமைந்துள்ள சைவ சீவன்கள் வாழ்கின்ற புண்ணிய பூமி காரைநகர் ஆகும். என்னை நாடாளுமன்றத்திற்கு அனுப்புவதற்கு பெரும்பங்கு வகித்த புண்ணியசீலர்கள் நிறைந்து விளங்கும் காரைநகரில் அமைந்துள்ள திண்ணபுரத்தில் கூத்தபிரான் திருநடனம் செய்கின்றான். தில்லை சிதம்பரத்தைப் போலவே திண்ணபுரத்திலும் கூத்தபிரானின் எழில் கோலம் அமைந்துள்ளதாலும் அங்கு நடைபெறுவது போன்று ஆகம விதிமுறை வழுவாது பூசை வழிபாடுகள் இங்கும் நடைபெறுவதால் இவ்வாலயத்தை 'ஈழத்துச் சிதம்பரம்' எனப் போற்றுகின்றோம்.

காரைநகர் சிவன்கோயிலில் நடைபெறுவது போன்று திருவாதிரை உற்சவம் இலங்கையின் வேறு எந்தக் கோயிலிலும் நடைபெறுவதில்லை. காரைநகர் மக்கள் நீண்டகாலமாக திருவாதிரை உற்சவத்தை ஈழத்துச் சிதம்பரத்தில் பெருவிழாவாகச் செய்து வருகின்றனர்.

திருவெம்பாவை உற்சவம் நடைபெறும் மார்கழி மாதத்தில் பொதுமக்கள் அனைவரும் சுத்த தாவர போஷணிகளாக மாறி கிராமம் எங்கும் பக்தி மயமாகிவிடும். திருவெம்பாவைக் காலத்தில் ஊர்மக்கள் அனைவரும் பக்திப் பரவசமாகி ஈழத்துச் சிதம்பரத்தில் ஒன்று கூடுவர். பத்து நாள்களிலும் நடைபெறும் திருவாதிரை உற்சவம் காண வெளியூர்களில் இருந்து பக்தர்கள் இங்கு வருவது வழக்கமாகும்.

குடாநாட்டில் வேறு எங்கும் இல்லாதவாறு காரைநகருக்கு செல்வதில் பாதுகாப்புக் கெடுபிடிகள் அதிகமாக உள்ளபோதிலும் இவ்வருடம் திருவாதிரை உற்சவ ஆரம்ப நாள்களில் வெளியூர்களில் இருந்தும் பெருந்தொகையான அடியார்கள் வருவதை நான் அங்கு சென்றபோது அவதானிக்கக் கூடியதாக இருந்தது. திண்ணபுரத்து கூத்தபிரானின் திருவருளை ஊர்மக்கள் மட்டுமன்றி இலங்கையின் பல பாகங்களில் உள்ள அடியார்களும் அனுபவித்து வருகின்றனர்.

இன்று ஈழத்துச் சிதம்பரத்தில் நடராஜப் பெருமான் தனது பரிவார மூர்த்திகளுடன் பஞ்சரதங்களில் பவனி வருகின்றார். ஈழத்துச் சிதம்பரத்தின் மிகப் பிரமாண்டமான தேர் ஓடும் வீதியான மழை வெள்ளத்தால் நிறைந்துள்ள மூன்றாம் வீதியில் பக்தி வெள்ளத்தால் திளைக்கும் பக்தர்கள் தேர் இழுத்துச் செல்லும் காட்சி மிக அற்புதமானது. பஞ்சரதங்களும் பவனி வரும்போது பார்ப்போர் உள்ளம் பக்தி வெள்ளத்தில் மூழ்கி விடும்.

ஐந்து தேர்களும் இருப்பிற்கு வந்த பின்னர் பிற்பகலில் பச்சை சாத்தி நடராஜப் பெருமான் தனது பரிவார மூர்த்திகளுடன தேரில் இருந்து இறங்கி நாதஸ்வர, தவில் வித்துவான்களின் செவிக்கினிய கானமழை பொழிய ஒரு குடையின் கீழ்(அசமானகிரி) திருநடனம் புரிந்தவாறு தனது சபைக்கு எழுந்தருளுவார். இந்த அற்புதக் காட்சியை காணும் பக்தர்கள் உலகியலை மறந்து பேரானந்தத்தில் திளைப்பர்.

வழமைபோல் இவ்வருடமும் மணிவாசகர் சபையின் திருவாசக விழா இன்று இரவு சிறப்பாக நடைபெற்று அதனைத் தொடர்ந்து தென்னிந்தியாவில் இருந்து வருகை தந்துள்ள நாதஸ்வர வித்துவான்களுடன் ஈழத்து நாதஸ்வர, தவில் கலைஞர்களும் இணைந்து கானமழை பொழிவர். பின்னிரவு 2 மணியில் இருந்து நடேசர் அபிஷேகமும், அதிகாலையில் ஆருத்திரா தரிசனமும் இடம்பெறும்.

காரைநகருக்குச் செல்வதிலுள்ள பாதுகாப்புக் கெடுபிடிகள் காரணமாக வெளியூர்களில் இருந்து பக்தர்கள் வரத் தயங்குவதாகக் கூறப்படுகின்றது. இது பற்றி ஏற்கனவே கடற்படையினருடன் கலந்துரையாடியுள்ளேன். அவர்கள் அடியார்கள் ஆலயத்தில் தங்கி நின்று வழிபாடு செய்வதற்கு பாஸ் அனுமதி வழங்குவதாகஉறுதி அளத்துள்ளனர். நான் உயர் அதிகாரிகளுடன் தொடர்புகொண்டு அடியார்கள் எவ்வித இடையூறுமின்றி ஆலயத்திற்குச் சென்று வர தேவையான ஒழுங்குகளை செய்து உள்ளேன். திண்ணபுரத்தில் எழுந்தருளியுள்ள தில்லைக் கூத்தனின் திருநடனம் கண்டு எம்மவர்கள் பிறவிப் பிணி நீங்கி எல்லையில்லா பேரின்ப பெருவாழ்வு பெற்று உய்ய எல்லாம் வல்ல ஈழத்துச் சிதம்பர சௌந்தராம்பிகை சமேத சுந்தரேஸ்வரப் பெருமானை வேண்டிநிற்கின்றேன்.

**தியாகராசா மகேஸ்வரன்**
*நாடாளுமன்ற உறுப்பினர், யாழ்.மாவட்டம்.*

## தென்னாட்டுச் ...
## காரைநகரில் தே...

ஈழத்துச் சிதம்பரம் எனப் போற்றப்படும்
கடந்த எட்டு நாள்களாக சிறப்பாக நடைபெற்
றின் பக்திப் பெருவிழாவாக இரதோற்சவம்
நடைபெறுகின்றது.

அடியார் துன்பம் நீக்கும் ஐந்துகரப் பிள்
யானை நாயகனாம் முருகப் பெருமான் ஒரு
வேண்டும் அருள் பாலிக்கும் ஐயனார் ஒரு தே
புரியும் நடராசப் பெருமான் ஒரு தேரின் மீ
இன்னொரு தேரிலும் தேனினும் இனிய திருவா
பெருமான் ஒரு தேரின் மீதுமாக அடியார்க
பவனிவருகின்ற காட்சி கண் கொள்ளாக் க

இந்தியாவில் உள்ள சிதம்பரத்தில், ஆ
முறைகளுக்கு ஏற்ப செய்யப்படுகின்ற பூசை
காரைநகர் சிவன்கோயிலிலும் பூசை வழி
சிதம்பரத்தில் உள்ளதைப் போல் ஐம்பத்
நடராசர் உருவத்தைச் சுற்றி அமைந்திருப்ப
சிதம்பரம்" எனப் போற்றிப் புகழப்படுகின்றது

தென்னாட்டில் உள்ள சிதம்பரத்துக்குச்
வினைத் தரிசிக்க முடியாது; அக் கண்க
அடியார்கள் ஈழத்திலே காரைநகரில் உள்
நடராஜப் பெருமானின் 'திருநடனக் கூத்தின
களிக்கும் வாய்ப்பினைப் பெறுகின்றனர்.

தில்லைத் தலத்திலே நிகழ்வது போன்
பெருமானது 'ஆதிரை விழா' முறை தவற
வருகின்றது. இதனாலே வளம்மிக்க இல
சைவ மக்கள் எல்லோரும் இவ்விழாவைத்
எம்மை விட்டு நீங்காத துன்பங்களை எல்
தேரில் எழுந்தருளி வருகின்ற அழகை கண்க
அளவற்ற பேரின்பப் பெருவெள்ளத்தில் மூழ்கி
துதிப்பார்கள்.

மார்கழி மாதம் தேவர்களின் புலரிக்கால
வைகறையில் துயில் நீங்கி நீராடி மலர் கொ
மீது வழிபாடு செய்வர். சிவவழிபாட்டுக்கு தி
சிறந்ததாகும். அதிலும் திருவாதிரை நாள் மி
வரும் திருவாதிரை நாள் நடேசப் பெருமானு
அத்திருநாளில் நடேசப் பெருமானுக்கு விசே
'ஆதிரை நாளை' ஒட்டி முன்னதாக உள்
செய்து வழிபடுதல் திருவெம்பாவைத் திரு

நால்வகை முத்திகளுள் மேலான முத்தி
பெற்ற மணிவாசகப் பெருமான் திருவெண்
புலரிக்காலத்தில் நீராடும் மகளிரைப் பார்த்
வியந்து, அம்மங்கையர் கூற்றாகவே திருவெ
அருளினார்.

மார்கழி நீராடலினால் விரும்பப்பட்ட பய
வகைப்படும் என்பர். பொதுப்பயன் நாடு செ
பயன் கன்னியர் சிறந்த கணவரைப் பெறுத
அடிகள் ஊடாக அறியக்கிடக்கின்றது.

*"முன்னி யவள் நமக்கு முன் சுரக்கும்*
*யென்னப் பொழியாய் மழையேலோ ரெ*
*"உன்னடியார் தாள் பணிவோம் ஆங்க*


COMPUTER & COMPUTER ACCESSORIES
COMPUTER TYPING & PRINTING
DISSERTATION PRINTING
போட்டோ கொப்பி, தொலைபேசிச் சேவை, பக்ஸ் வசதிகள் யாவற்றையும் ஒரே இடத்தில் சிறந்த முறையில் குறைந்த செலவில் செய்து கொள்ள நாடுங்கள்
**SRIMURUGAN**
**COMMUNICATION & COMPUTER SYSTEMS**
T.P. NO:- 021-2670, 3588
FAX: 021-3214
303, K.K.S. ROAD,
JAFFNA.

**LALITHA TEX**
லலிதா புடைவை மாளிகை
உங்கள் ஜவுளித் தேவைகளுக்கும் கல்யாணப் பட்டுப் புடைவைக்கும் தலை சிறந்த ஸ்தாபனம்.
NO.5,6. NEW MARKET, JAFFNA.
கிளை:- சிறிகணேஸ் ரெக்ஸ்
இல.20, நவீன சந்தை,
யாழ்ப்பாணம்.

சுபமுகூர்த்தப் பட்டுப் புடைவைகளுக்கு கைராசியான ஸ்தாபனம்
**கணேசன் ஸ்ரோர்ஸ்**
201, கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

மொத்த, சில்லறை புடைவை வியாபாரிகள்
**நவம் ரெக்ஸ்**
இல.10, ஜூபிலி பஜார்,
மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

உள்நாட்டு, வெளிநாட்டு தொலைத் தொடர்புகளுக்கு நீங்கள் நாடவேண்டிய இடம்
**P.R.COMMUNICATION**
14, ஜூபிலி பஜார்
மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
TEL : 94 - (0)21 - 2008
: 94 - (0)21 - 2137

திருமணப் பட்டுச் சேலைகளின் சோலை
**மகாராணி பட்டுச் சோலை**
50, பெரியகடை,
யாழ்ப்பாணம்.

**வெங்கடேஸ்வரா** 125 A, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
சைக்கிள், சைக்கிள் உதிரிப்பாக விற்பனையாளர்கள் தொ.பேசி:- 2905
கிளை நிறுவனம்: சிறி மாதவன் Sri Mathavan
T.V. டெக், வீடியோ, ஓடியோ கசட், கசற் றேடியோ, றேடியோக்களும், சங்கீத ஓகன்கள், சகலவிதமான கைக்கடிகாரங்கள், சுவர் மணிக்கூடு, பிலிம் றோல் மற்றும் அன்பளிப்புப் பொருள்கள் பெற்றுக்கொள்ளலாம்.
T.P - 2905
97, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

தேரேறி அடியவர் தம் வல்வினை போக்கும்
ஈழத்துச் சிதம்பர தில்லைக்கூத்தன்
கழல் போற்றும்
**இ.ச.பேரம்பலம் சக நிறுவனம்**
இல. 50,52,54, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

புத்தம் புதிய Lumala துவிச்சக்...
மற்றும் உதிரிப்பாகங்கள...
நித்தம் நீங்கள் நாடவேண்...
**ஈஸ்வரன் ...**
இல.69, கஸ்தூரியார் வீதி, யா...
தொலைபேசி :- 021 -

# ...ர்த் திருவிழாச் சிறப்பு மலர்



## ...சிவன்கோயில்)

## ...01-2001



## கண் கொள்ளாக் காட்சி கண்டு சகல சௌபாக்கியமும் பெறுக!

மூர்த்தி, தலம், தீர்த்தம் மூன்றும் ஒருங்கே அமையப்பெற்று வடமொழி வேத சிவாகம நெறி தவறாது பூசை விழாக்கள் நடைபெறும் ஈழத்துச் சிதம்பர புண்ணிய ஷேத்திரத்தில் வருடத்தில் மூன்று முறை நடைபெறும் மஹோற்சவத்தில் சாந்தீக மஹோற்சவமாகிய திருவெம்பாவை உற்சவம் மிகச் சிறப்பாக நடைபெறும் இவ்வேளையில் இன்று (08-01-2001) காலை தில்லைக்கூத்தன் சிவகாமி அம்பாள் சமேதராகவும் ஏனைய பரிவார மூர்த்தங்களோடும் பஞ்சரதத்தில் பவனி வரும் கண் கொள்ளாக் காட்சியினையும்,

*"ஆர்த்த பிறவித் துயர் கெட நாம்*
*ஆர்த்தாடும் தீர்த்தன் நற்தில்லைச் சிற்றம்பலத்தே*
*தீயாடும் கூத்தன்"*

இரவு நடைபெறும் ஆருத்திரா அபிஷேகத்தினையும் நாளை (09-01-2001) மாலை நடைபெறும் திருவூடல் விழாவினையும் அடியார்கள் யாவரும் தரிசனம் செய்து சகல சௌபாக்கியங்களோடும் வாழ எம்பெருமான் திருவருளை இறைஞ்சி ஆசி கூறுவதில் பெருமையடைகின்றோம்.

ஆ. அம்பலவிமுருகன்,
மு. சுந்தரலிங்கம்,
*ஆதீனகர்த்தாக்கள்.*

## ...ட்டுச் சிதம்பரத்தின் திருவாதிரை விழாவை ...ரில் நேரில் கண்டு களிக்கும் பக்தர் கூட்டம்

...னப் போற்றப்படும் காரைநகர் சிவன்கோயிலில் ...றப்பாக நடைபெற்றுவரும் திருவாதிரை உற்சவத் ...க இரதோற்சவம் இன்று மிகக் கோலாகலமாக ...

...ம் ஐந்துகரப் பிள்ளையாருடன், வள்ளி - தெய்வ ...ப் பெருமான் ஒரு தேரின் மீதும் அடியவர்கள் ... ஐயனார் ஒரு தேரிலும் தில்லையில் திருநடனம் ...ர் ஒரு தேரின் மீதும் சிவகாமசுந்தரி அம்பாள் ...லும் இனிய திருவாசகத்தைத் தந்த மணிவாசகப் ...துமாக அடியார்கள் புடைசூழ பஞ்சரதங்களும் ...ண் கொள்ளாக் காட்சியாக விளங்கும்.

...சிதம்பரத்தில், ஆகமத்தில் சொல்லப்பட்ட விதி ...ப்படுகின்ற பூசை வழிபாட்டு முறைகள் போன்று ...லும் பூசை வழிபாடுகள் நடைபெறுவதாலும், ... போல் ஐம்பத்தொரு சுடர் கொண்ட திருவாசி ...றி அமைந்திருப்பதாலும் இவ்வாலயம் "ஈழத்துச் ... புகழப்படுகின்றது.

... சிதம்பரத்துக்குச் சென்று திருவாதிரை விழா ...து; அகக் கண்களால் அக்காட்சியை காணும் ...ாரைநகரில் உள்ள சிவன்கோயிலில், தில்லை ...நடனக் கூத்தினை' புறக் கண்களால் கண்டு ...பெறுகின்றனர்.

...நிகழ்வது போன்று திண்ணபுரத்திலும் நடராசப் ...ரா' முறை தவறாது சிறப்பாகச் செய்யப்பட்டு ... வளம்மிக்க இலங்கை மாநகரிலே வாழ்கின்ற ... இவ்விழாவைத் தரிசிக்க வருவார்கள். வந்து, ...ன்பங்களை எல்லாம் நீக்குகின்ற கூத்தபிரான் ...ற அழகை கன்கள் கொள்ள நிறைவாகக் கண்டு ...ள்ளத்தில் மூழ்கி கூத்தபிரானது திருவடிகளைத் ...

...ளின் புலரிக்காலமாகும். இக்காலத்தில் மக்கள் ... நீராடி மலர் கொய்து சிவபெருமான் திருவடிகள் ...வழிபாட்டுக்கு திருவெம்பாவை பத்துநாள்களும் ...வாதிரை நாள் மிகச் சிறந்ததாகும். மார்கழியில் ...டேசப் பெருமானுக்குச் சிறப்பான விழா ஆதலில் ...ருமானுக்கு விஷேட அபிஷேகம் செய்வர். அந்த ...ன்னதாக உள்ள ஒன்பது நாள்களும் விழாச் ...ம்பாவைத் திருவிழாவாகும்.

... மேலான முத்தியாகிய, 'சாயுச்சிய முத்தியைப்' ...ான் திருவெண்ணாமலையில் மார்கழி மாதத்து ... மகளிரைப் பார்த்து, அவரது பக்தி மிகுதியை ...ற்றாகவே திருவெம்பாவைப் பாடல்களை இயற்றி ...

...விரும்பப்பட்ட பயன் பொதுவும் சிறப்புமாக இரு ...ுப்பயன் நாடு செழிக்க மழை பெய்தல், சிறப்புப் ...வரைப் பெறுதல். இதனைப் பின்வரும் பாடல் ...க்கின்றது.

*... முன் சுரக்கும் இன்னருளே*
*...மழையேலோ ரெம்பாவாய்"*
*...ணிவோம் ஆங்கவர்க்கே பாங்காவோம்*
*அன்னவரே யெங்கணவ ராவார்"* எனவும்
*"எங்கொங்கை நின்னன்ப ரல்லார் தோள் சேரற்க"*
எனவும் கூறியிருத்தலால் அறியலாம்.

ஆன்ம நாயகனாகிய இறைவனை அடைவதற்குரிய பக்குவ முதிர்ந்த உயிர்களையே கன்னிப் பெண்களாகவும், ஆணவ மலவிருளிற் பிணைப்புண்டிருத்தலையே உறங்கிக் கிடத்தலாகவும், மலவாற்றல் ஒளியைப் பெறும் நிலையே துயில் நீத்தெழும் நிலையாகவும், மலபரிபாகமுடைய உயிர்கள் அஃதில்லாத உயிர்களை உணர்த்தி அன்பு நெறிப்படுத்தும் இறையருளிற் தோய்வித்தற்கு அழைத்தலையே நீராட அழைத்ததாகவும் அமைத்துக் கொண்டு இத்திருவெம்பாவை அருளிச் செய்யப்பட்டதாகக் கூறப்படுகின்றது.

திருவெம்பாவைக் காலங்களில் இப்பாடல்கள் கோயில்களில் படிக்கும் வழக்கம் ஏற்பட்டது. பக்தி மிகுந்த சைவர்களின் வீடுகளில் மார்கழி மாதம் முழுவதும் திருவெம்பாவை படிப்பர். பத்து நாள்களும் ஆசாரசீலராய் விரதமிருந்து பொதுவாகத் திருவாசகத்தையும், சிறப்பாகத் திருவெம்பாவையையும் படிப்பர். சிலர் 'திருவாதவூரடிகள் புராணத்தையும்' படிப்பதுண்டு.

உலகத்துச் சைவமக்கள் எல்லோரும் தில்லையில் ஒன்பதாம் நாள் ஒன்று கூடி நடராஜப்பெருமானின் திருநடனத்தைக் கண்டுகளிப்பர். நடேசப் பெருமானுக்கு விரதம் அனுஷ்டிக்கச் சிறந்த நாள் 'ஆதிரை நாளாகும்.' சொல்லப்பட்ட ஒன்பது நாள்களும் ஒரு நேர உணவுண்டு பத்தாம் நாள் உபவாசம் இருப்பதுவும் சிறந்த சைவ ஆசாரமாகும். இந்நாள் சிவசக்தியாகிய கௌரி அம்பாளுக்குரிய விரத நாள் ஆகும் என்று 'காரணாகமம்' கூறுகின்றது.

திருவெம்பாவை தெய்வத் தன்மை நிறைந்த அலங்காரத் திருவிழாவாகும். ஒன்பதாம் நாளில் ஒளிமயமாகிய அழகிய தேர்கள் ஐந்தும் தூய்மையான விண்ணுலகிலிருந்து இறங்கி வலமாகச் சுற்றி வருவது போல் மூன்றாம் வீதியில் அழகாக வீதிவலம் வரும். தில்லைத் தலத்திலே நடைபெறுவது போல திண்ணபுரத்திலும் நடராசப் பெருமானது ஆதிரை விழா முறை தவறாது சிறப்பாகச் செய்யப்பட்டு வருகின்றது. 'ஆதிரா' என்பது நனைதல், ஈரமாதல், முழுகுதல் எனப் பொருள்படும். ஆதிரா நாளிலே இறைவனுக்கு அபிஷேக ஆராதனை செய்யப்படுகின்றது. ஈழத்துச் சிதம்பரத்திலும் திருவாதிரை விழாவில் உதயத்தில் நிகழும் 'ஆருத்திரா தரிசனமும்' அதன் பின் பகல் முழுவதும் ஒன்றன் பின் ஒன்றாக நூற்றுக்கு மேற்பட்ட காவடிகள் இங்கு வந்து தங்கள் தங்கள் நேர்கடன்களை முடித்துச் செல்லும். பெரும்பாலான நேர்கடன்கள் ஆலய தோற்றத்திற்கு மூலாதாரமாக விளங்கும் 'ஆண்டிகேணி ஐயனாருக்கு' உரியனவாகும்.

ஈழத்துச் சிதம்பரம் என்னும் இத்திவ்விய தலத்திலே புலரிக்காலத்தில் நிகழும் அபிஷேகமும், ஆராதனையும் அதன்பின் பகல் முழுவதும் வந்து கொண்டிருக்கும் காவடியாட்டங்களும் பிற்பகல் நான்கு மணிக்கு பின் நடைபெறும் திருவூடலும் கண்கொள்ளாக் காட்சிகளாகும். பத்தாம் நாள் பிற்பகலில் கங்கையைச் சடையிலே கரந்து வைத்த கள்ளத்தைக் காரணமாகக் கொண்டு உமையம்மையார் பெருமானோடு கூடிய திருவூடலைச் சிறப்பாகச் செய்து காட்டுவர். திருக்கோயிலிற் செய்யப்படும் ஒவ்வொரு கிரியைகளும் ஒவ்வொரு உண்மைப் பொருளை உணர்த்துவதாகும். திருவூடல் அருளலை உணர்த்தும் என்பர். ஈழத்துச் சிதம்பரத்தில் பத்து நாள்களும் நடைபெறும் திருவாதிரை விழாவைக் கண்ட கண்களே கண்களாகும். திருவாதிரை உற்சவ நாளில் ஆண்டிகேணி ஐயனாரையும், சிவகாமசுந்தரி சமேத நடராஜப் பெருமானையும் தரிசிக்கும் வாய்ப்பைப் பெற்றவர்கள் பிறவிச் சாகரத்தில் நின்றும் நீங்கி எல்லையில்லாப் பேரின்பப் பெருவாழ்வு அடைவார்களாக!

ந. பாரதி,
*உதயன் செய்தியாளர்.*

(C/14686)


ஈழத்துச் சிதம்பரத்தில் இன்று நடைபெறும் தேர்த்திருவிழாவை சிறப்புற வாழ்த்தும்
**அற்புதா ரேடிங் கொம்பனி**
198, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
(பஸ் நிலையம் முன்பாக)
சகல விதமான பேப்பர், கொப்பி, பாடசாலை உபகரணங்களை மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

'கல்லையொத்த மனமும் கசிந்துருகக் காட்சி தந்திடும் தில்லைச் சிவனின் திருத்தேர் வடம் பிடித்திழுக்க வாரீர்!'
**யோ.சிவரஞ்சன்**
**பல்பொருள் வாணிபம்**
45, கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

வண்ண வண்ணப் பட்டுப் புடைவைகளின் சங்கமம்
**சீமாட்டி புடைவைக் கடல்**
122, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி - 021-2196

*திருமணப் பட்டுப் புடைவைகளின் சாம்ராச்சியம்*
**சிவகணேசன் ஸ்ரோர்ஸ்**
(அழகிய ஜவுளிகளின் ஆலயம்)
41, பெரியகடை, யாழ்ப்பாணம்.
தொலைபேசி:- 2063

**குபேரன் களஞ்சியம்**
இல. 160, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
சொக்கிலேட் வகைகள், பிஸ்கற் வகைகள், மாஜரீன், சொப்பிங் பாக், மற்றும் பல்பொருள் வாணிபம்.

மோட்டார் சைக்கிள் உதிரிப்பாகங்கள் மற்றும் பல்பொருள் வாணிபம் விமான மூலமும் கப்பல் மூலமும் கொழும்பில் இருந்து சகல பொதிகளும்.
(கொழும்பு - யாழ். ரான்ஸ்போட் ஏஜென்ட்)
யாழ்ப்பாணத்திற்குத் துரிதகதியில் அனுப்பி வைக்கப்படும்.
**MAHALUXMY STORES**
212,Stanley Road
Jaffna.
T.P - 021 - 2024, 2025, 2134

...la *துவிச்சக்கரவண்டிகளுக்கும் ...திரிப்பாகங்களுக்கும் ...ள் நாடவேண்டிய இடம்*
**...ன் றேடஸ்**
...ார் வீதி, யாழ்ப்பாணம்.
...பசி :- 021 - 2813

**கே.கே.கந்தையாபிள்ளை அன் சன்ஸ்**
318 (124), ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
பலசரக்குப் பொருள்களை மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம்.

**வெஸ்ரேன் யூனியன் பணம் மாற்றுதல்**
உலகின் எப்பாகத்திலிருந்தும்
WESTERN UNION MONEY TRANSFER ஊடாக
யாழ்.குடாநாட்டிற்கு பணம் அனுப்பினால்
அன்றைய தினமே பணம் உரியவர்களுக்கு வழங்கப்படும்.
ஏக முகவர்: ***Western Union Money Transfer***
T.P - 021 - 2024
- 2025
- 2134
Mahaluxmy Stores,
212,Stanley Road,
Jaffna.

# வாழ்த்துகின்றோம்



பனை அபிவிருத்திச் சபையின் தலைவராக

**திரு.முருகேசு பாக்கியநாதன்**

அவர்கள்

மீண்டும் நியமிக்கப்பட்டுள்ளதையிட்டு
எமது உளம் கனிந்த
வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**ஊழியர் சங்கம்.**

*பனை அபிவிருத்திச் சபை,*
*53, கண்டி வீதி,*
*யாழ்ப்பாணம்.* (82581)

# VACANCIES

An International Organisation has the following vacancies for suitably qualified candidates:

1. **An Accountant**
2. **An Internal Auditor**

The Applicants should possess good Educational Background and Experience in the respective field called for.

Computer literacy would be helpful.
Please send in Your Bio-Data giving full particulars within 10 days, to the undermentioned address

**Box Number: 1173**
**C/o Uthayan**
**361, Kasthuriyar Road,**
**Jaffna.**

Also indicate the post applied for on the top left hand corner of the cover.

(C/14675)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 02 - 10 - 1939 | 21 - 12 - 1999 |

## அமரர் சீனியர் சிவலிங்கம்

திதி: 08.01.2001

அன்பின் வடிவமே! அழகின் சிகரமே!
உதவியின் உறைவிடமே! எம் உள்ளக்
கோவிலில் வீற்றிருக்கும் ஒளிவிளக்கே!
ஓடி மறைந்ததைய்யா ஓராண்டு - ஆனாலும்
ஒரு நொடியும் உம் நினைவு எம்மைவிட்டகலவில்லை.
கணப்பொழுதில் உமைக்கவர்ந்த காலனவன்
தொடிப்பொழுதும் தரிக்காது சிவனடியில் சேர்ந்தனனோ!
காலாங்காலமாய்க் கண்ணீரில் கரையும் எம்
இதயத்தைக் காணிக்கையாக்குகின்றோம்.
உங்கள் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம்சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

- குடும்பத்தினர்.

*மாவடி,*
*வல்வெட்டி.* (82578)

# சித்திரம்

**2003 A/L**
ஆரம்பமாகியுள்ளது
**தரம் 6 - O/L, A/L**
வரை நடைபெறுகிறது.
தரச் சான்றிதழுடன்
**I.A.T**
இல.76, அத்தியடி வீதி,
கந்தர்மடம். (82657)

# அறிவகம் கல்வி நிலையம்

அச்சுவேலி.

அனேகு பெற்றோரின் வேண்டுகோளிற்கு இணங்க
***A/L கலை, வர்த்தக***
வகுப்புக்கள் ஆரம்பமாகின்றன.

**A/L 2003**

ஆரம்பம்:- 09-01-2001
(செவ்.8.00 a.m)
(82661)

# வைத்தியம்

செங்கண்மாரி, அல்சர், ஆஸ்மா, வாதநோய்கள், வலிப்புநோய், பீனிசம், தலையிடி, தலை கால் அவியல், சரும நோய்கள், மாதவிடாய்க்குத்து, இரத்தப்போக்கு, வெள்ளைக் கசிவு, கருவழிதல், மகப்பேறின்மை, குழந்தை வைத்தியம், வீரியக்குறைவு, மூல வியாதிகள், மூத்திர ரோகங்களில் பிரபலமானவர். சகல வியாதிகளையும் குணப்படுத்துபவர்.

*வேலணை*
*வைத்தியகலாநிதி*
**சி. இராசரத்தினம்,**
121, 2 ஆம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி எண் 2459 (82648)

**UNIVERSITY OF JAFFNA**

## TENDER NOTICE

The Chairman, Tender Board, University of Jaffna will receive sealed tenders from contractors registered with ICTAD for Civil Engineering works or from Multi Purpose Co-operative Socities for the "Repairs to staff toilet at Faculty of Medicine", University of Jaffna.

Tender forms may be obtained from the Works Engineer (Civil), University of Jaffna until 17.01.2001 on producing Registration book and receipt for the cash payment for the following tender fees at the Shroff's Counter of University of Jaffna.

**Non refundable deposit - Rs.250/=**
**Refundable deposit - Rs.1500/=**

Perfected tenders to be sent to reach the Chairman, Tender Board, University of Jaffna or deposited in the tender box, kept at the Registrar's office, University of Jaffna on or before 25.01.2001 at 10.00 a.m

Tender forms may be inspected by the tenderers free of charge at the Maintenance Branch of this University during office hours if necessary.

**Registrar,**
**University of Jaffna,**
**P.O.Box 57,**
**Thirunelvely, Jaffna.**
(C/14658)

# இலவச பரிசோதனை

வட்டுக்கோட்டை லயன்ஸ் கழகத்துடன் மானிப்பாய் கோவில் பற்று, சாவகச்சேரி லயன்ஸ் கழகங்கள் இணைந்து நடத்தும் மருத்துவ, கண் பரிசோதனைகள்.

**மருத்துவ பரிசோதனை:**

லயன் (Dr.) - S. சதாசிவம்
லயன் (Dr.) - T. அருமைத்துரை
லயன் (Dr.) - S.S. அருளானந்தம்
லயன் (Dr.) - K. சிவனடியான்
லயன் (Dr.) - C. சுந்தரராஜன்

**கண்பரிசோதனை:**

லயன் **J.S.A Fernando M.J.F.**
உம் சகோதரரும்

இடம்:- அராலி சரஸ்வதி வித்தியாலயம்
திகதி:- நாளை (09-01-2001)
நாள் :- செவ்வாய்
நேரம்:- 9.00 மணி

பெயர்களை பாடசாலையில் 09-01-2001 காலை 8.00 மணிக்கு பதிவு செய்யவும். கண் பரிசோதனை 45 வயதுக்கு மேற்பட்ட 150 பேருக்கு மட்டும்.

**லயன் (Dr) S. சதாசிவம்,**
செயலாளர்
வட்டு லயன்ஸ் கழகம்
சேவை இணைப்பாளர்

(82596)

# கண்ணீர் அஞ்சலி



எமது முன்னாள் பிரதம முகாமையாளர்

**உயர்திரு. இராசையா சிவலிங்கம்**

அவர்களின் மறைவுச் செய்தி கேட்டு அதிர்ச்சியடைந்தோம். அன்னாரின் குடும்பத்தாரின் துக்கத்தில் நாமும் பங்கு கொண்டு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

இலங்கை வங்கி
யாழ்.மேற்தரக்கிளை ஊழியர்கள்.

(82611)

# ஓராண்டு நினைவலைகள்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 10 - 03 - 1932 | 21 - 12 - 1999 |

## திருமதி இராசமணி அப்புத்துரை

திதி: 08-01-2001

ஓராண்டு ஆயிடினும்
ஓடிடுமோ உம் நினைவு
பல நினைவுச் சுமைகளுடன்
பார் விட்டு அகன்றீரே!
பரிதவிக்கும் உம் குடும்பம்
பாதி வழி நிற்கின்றோம்.
எம் வாழ்வு முழுமைக்கும்
என்றும் நீரே துணையாவீர்!
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

**கணவர், பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

தகவல்: **ஜெகன்.ஸ்ரீ** (சுவிஸ்)

*குப்பிளான்* (82453)

# நிழல் அமைச்சரவையை ஐ.தே. கட்சி அமைக்கும்!

கொழும்பு, ஜன.8

46 அமைச்சர்களைக் கொண்ட அரசின் நடவடிக்கைகளைக் மேற்பார்வை செய்ய 25 அமைச்சர்களைக் கொண்ட நிழல் அமைச்சரவை ஒன்றை அமைப்பது தொடர்பாக ஆராய்வதற்கு உயர் மட்டக் குழு ஒன்றை எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரசிங்க அமைத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நம்பிக்கையான வட்டாரங்களை மேற்கோள்காட்டி கொழும்பு ஆங்கில வார இதழ் ஒன்று இத்தகவலை வெளியிட்டிருக்கிறது.

கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு அரசியல், பொருளாதார சமூக விடயங்களில் அதிக பொறுப்புகளை வழங்குவது குறித்தும் இந்த நிழல் நிர்வாகத்தை அமைப்பதன் அவசியம் குறித்தும் ரணில் வலியுறுத்தி உள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக தனது ஆலோசனைகளை ஆறு உறுப்பினர் குழு ஏற்கனவே சமர்ப்பித்துள்ளது. எம்.லொக்குபண்டாரா, ரிரோன் பெர்னான்டோ, மஙிந்த சமரசிங்க, ஜோன் அமரதுங்க, டாக்டர் கருணாசேன கொடித்துவக்கு, வஜிர அபயவர்த்தன ஆகியோரே குழுவினராவர். இந்த நிழல் அமைச்சு ஒவ்வொன்றிலும் சிறப்புத் தேர்ச்சி பெற்ற நிபுணர்கள், கல்விமான்கள், புத்தி ஜீவிகள் ஆகியோரும் சேவையாற்றுவர். பிரிட்டனின் தொழிற்கட்சி, கன்சர்வேற்றிவ் கட்சி நடவடிக்கைகளை பின்பற்றியே இந்த இணையரசாங்கம் அமைக்கப்படவிருக்கிறது. அரசின் ஒவ்வோர் அமைச்சின் நடவடிக்கைகளையும் இந்த நிழல் அமைச்சு ஒவ்வொன்றும் நுணுக்கமாக ஆராயும். கட்சியின் ஏனைய நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒவ்வொரு குழுவிலும் ஆலோசகர்களாகச் செயற்படுவார்கள்.

இம்முறையினால் அரசாங்க அமைச்சர்கள் தமது பணிகளை நியாயமாகவும், சரியாகவும் செய்ய முன்வருவார்கள் என்று ஐ.தே.க. நம்புகிறது. சில குறிப்பிட்ட விடயங்களில் அரசு உரிய சட்ட விதிகளைப் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்காது விடுமானால், அத்தகைய ஒன்றை இந்தக்குழு ஒவ்வொன்றும் தனிநபர் பிரேரணை மூலம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கும். இதனால் நாட்டிற்கு நல்ல சட்ட அடிப்படை ஏற்படும். அரசு புறக்கணிக்கும் விடயங்கள் ஐ.தே.க. எடுக்கும் மாற்று நடைமுறைகளால் நிறைவு செய்யப்படும். இறுதியில் மக்கள் இதனால் மிகுந்த நன்மையடைவர் - என்று ஐ.தே.க. வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (ஐ-20)

## பொங்கல் விழா

யாழ்ப்பாணம்,ஜன.8

யாழ்ப்பாணம் திருமறைக் கலாமன்றம் நடத்தும் பொங்கல் விழா எதிர்வரும் 15 ஆம் திகதி மாலை 5.30 மணிக்கு மன்றத்தில் நடைபெறவுள்ளது.

இந்த விழாவில் 'கனவில் ஒரு நிஜம்'(தனியாள் அரங்கு), 'சோழன் மகன்' நாட்டுக்கூத்து போன்ற பல கலை நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன. (ஐ-5-17)

## திருவாசக முற்றோதல்

அல்வாய் வேவிலந்தை முத்துமாரி அம்பாள் ஆலயத்தில் திருவாசக முற்றோதல் நாளை செவ்வாய்க் கிழமை காலை 8 மணிக்கு நடைபெறும்.

இவ்வைபவத்தில், பிரதம விருந்தினராக, பருத்தித்துறை மாவட்ட நீதிவான் எஸ்.ஏ.ச.ஏகநாதன் கலந்து கொள்வார். (ஐ)

## நாவற்குழியில் இருந்து வந்தவர் விவரிப்பு:

# நாம் இருந்த பதுங்கு குழிக்கு 10 மீற்றர் தொலைவில் விமானக் குண்டுகள் வீழ்ந்தன

## உயிரைக் கையில் பிடித்தபடி இருந்தோம்

தென்மராட்சி,ஜன.8

நாம் மறைந்திருந்த பதுங்கு குழியிலிருந்து சுமார் பத்து மீற்றர் தூரத்தில் 'மிக்' விமானக் குண்டுகள் வீழ்ந்து வெடித்த போதிலும் பதுங்கு குழிக்குள் இருந்த எனது கணவரும் மகனும் நானும் தெய்வாதீனமாக உயிர்தப்பினோம். பதுங்கு குழி மறைப்புக்காகப் போடப்பட்டிருந்த கொட்டில் இருந்த இடம் தெரியாமல் தகர்ந்து போனது இந்தக் குண்டு வீச்சில் பாஸ்ரர் தியாகராசா என்பவர் தலையில் ஷெல் சிதறல் தாக்கி பலியானார். குண்டு வீழ்ந்த இடங்களில் பாரிய கிடங்குகள் காணப்பட்டன.

கடந்த வாரம் நாவற்குழி மகா வித்தியாலயத்திலிருந்து மீட்டு வரப்பட்ட சாவக்ச்சேரி கல்வயலைச் சேர்ந்த கனகசுந்தரம் பூலோகம் (வயது 51) என்பவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

சுமார் ஏழுமாத காலம் யுத்தம் நடைபெற்ற பிரதேசத்தில் தங்கி இருந்த பின் வெளியேறி வந்துள்ள அவர் தமது அனுபவங்கள் குறித்து விவரித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கடந்த மே மாதம் கல்வயல் பகுதியில் ஏற்பட்ட ஷெல் வீச்சினால் நாங்கள் இடம்பெயர்ந்து மட்டுவில் ஊடாக கைதடிப் பிள்ளையார் கோயிலுக்குச் சென்று மூன்று மாதங்கள் தங்கியிருந்தோம்.

கைதடியில் இருந்த வேளையில் ஷெல் வீச்சு இல்லாத நாள்களில் எனது கணவர் எங்கள் வீட்டுக்குச் சென்று நெல் எடுத்து வருவார். ஒரு நாள் எங்கள் வீட்டிலிருந்து நெல் ஏற்றிக் கொண்டு வரும் போது காவல் துறையினர் எனது கணவரைத் தடுத்து வைத்திருந்து 10 தினங்களின் பின்னர் விடுவித்தனர். நாங்கள் தங்கியிருந்த கோயிலின் பூசாரி (கண்ணன் ஐயர்) எமக்கு சகல வழிகளிலும் உதவியதால் பல குடும்பங்கள் கோயிலில் தங்கியிருந்தோம். ஒரு நாள் நாங்கள் தங்கியிருந்த கோயிலுக்கு வந்த இளைஞர்கள் எங்களை வன்னிக்கு வருமாறு அழைத்தனர். நாங்கள் மறுத்தோம்.

அதன் பின்னர் நாங்கள் நாவற்குழி மகாவித்தியாலயத்தில் இடம்பெயர்ந்த மக்கள் தங்கியிருப்பதாக அறிந்து அங்கு சென்று நான்கு மாதங்களாக தங்கியிருந்தோம். நாங்கள் அங்கு சென்ற வேளையில் அங்கிருந்த கடையில் பொருள்களை அதிகவிலை கொடுத்து வாங்கினோம். சீனி கிலோ 50 ரூபாவாகவும் நுளம்புத்திரி பெட்டி 50 ரூபாவாகவும் வாங்கினோம். ஏனைய பொருள்களும் விலை அதிகம் என்றாலும் வாங்கினோம்.

பின்னர் அப்பகுதியில் இருந்த களஞ்சியம் ஒன்று ஷெல்வீச்சில் சேதமடைந்ததால் அங்குள்ள பொருளகளை எடுக்குமாறு இளைஞர்கள் சொன்னதால் அங்கிருந்த குடும்பங்கள் அவற்றினைப் பகிர்ந்து எடுத்தோம். அப்பகுதியைச் சேர்ந்தவர்கள் மரக்கறிப் பயிர்களை பயிரிட்டதால் மரக்கறி வகைகள் சமையலுக்குத் தாராளமாக கிடைத்தன. களஞ்சியத்திலிருந்து எடுக்கப்பட்ட பொருள்களில் எமக்கு அரிசி, மா,சீனி,உழுந்து, பயறு, பருப்பு போன்றவை கிடைத்ததால் நாங்கள் அங்கு இருக்கும் வரை உணவுக்குத் தட்டுப்பாடு ஏற்படவில்லை.

### உயிரைக் கையில் பிடித்தபடி இருந்தோம்

நாங்கள் நாவற்குழியிலிருந்த போது தினமும் ஷெல் வீச்சுக்களும், பல்குழல் ஷெல்களும், 'மிக்' விமானக் குண்டு வீச்சுக்களும் இடம்பெற்றதால் உயிரைக்கையில் பிடித்தபடி இருந்தோம். ஷெல்கள் குடியிருப்புப் பகுதிகளிலேயே வீழ்ந்தன. நாவற்குழி மகாவித்தியாலயப் பகுதியில் வீழ்ந்த ஷெல்லினால் வகுப்பறை ஒன்று பலத்த சேதமடைந்தது. ஷெல் வீச்சின் போது எனக்கு காயமேற்பட்ட போது இளம் யுவதிகள் வந்து மருந்து கட்டினார்கள். எம்மை வன்னிக்கு வருமாறு வற்புறுத்திய போதிலும் அங்கிருந்த அனைவரும் வன்னிக்குச் செல்ல மறுத்து விட்டனர். நாவற்குழிப் பகுதியில் வீழ்ந்து வெடித்த ஷெல்கள், விமானக் குண்டுகள் அங்குள்ள குடியிருப்புப் பகுதி வயல்பகுதி ஆகிய வற்றில் வீழ்ந்து வெடித்ததால் பல இடங்கள் குன்றும் குழியுமாகக் காணப்படுகின்றன.

### படையினர் வந்தனர்

கடந்த 26 ஆம் திகதி இளைஞர்கள் அவ்விடங்களை விட்டு வெளியேறிய பின்னர் 30ஆம் திகதி அன்று பெருமளவு படையினர் நாம் இருந்த இடத்திற்கு வந்தனர். எங்களைக் கண்டதும் பயப்பிட வேண்டாம் எனக்கூறி எம்மை ஒரு வேப்பமரத்தின் கீழ் இருக்குமாறு கூறிவிட்டுச் சென்றனர். பின்னர் அங்கு பஸ் ஒன்றினைக் கொண்டு வந்து அதில் அனைவரையும் ஏறி அமரச் சொன்னார்கள். அங்கிருந்த அனைவரும் மறுத்ததால் நாங்கள் எந்தவோர் உதவியும் செய்யமாட்டோம் எனக் கூறிவிட்டுச் சென்றனர். புதுவருடதினத்தன்று எமக்குப் பெரிய விருந்து அளித்ததுடன் தொடர்ந்து மூன்று நாள்களுக்கு சமைத்த உணவையும் வழங்கினார்கள்.

அங்கு தேங்காய் மலிவாக இருந்ததால் நாங்கள் தேங்காய் எண்ணெய்காச்சி எமது தேவைக்குப் பயன்படுத்தினோம். வெற்றிலை பாக்கு மருந்துக்குக் கூட கிடைப்பதில்லை.

கடந்த 4ஆம் திகதி தென்மராட்சி பிரதேச செயலர், கிராம அலுவலர்கள் கைதடி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் ஆகியோர் அங்கு வந்து எமக்கு அத்தியாவசியப் பொருள்களை வழங்கினர். அங்கு எங்களுடன் தங்கியிருந்த மக்களை விட்டு விட்டுவர மனமில்லாத போதிலும் எனது மகனின் கல்வி கருதி நாங்கள் புறப்பட்டு வந்தோம்.

இவ்வாறு அந்தத் தாய் தனது அனுபவத்தைத் தெரிவித்தார். (ஐ-117)



ஊர்காவற்றுறை சிறிய புஸ்பமகளிர் வித்தியாலயத்துக்கு பன்முகப் படுத்தப்பட்ட நிதியில் இருந்து இரண்டரை லட்சம் ரூபா செலவில் புதிதாக அமைக்கப்படவுள்ள இரண்டு மாடிகளைக் கொண்ட புதிய வகுப்பறைக் கட்டடத்துக்கான அடிக்கல் நடும் வைபவம் கடந்தவாரம் நடைபெற்றது. அச்சமயம் எடுக்கப்பட்ட படம் இது.

ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி அதிபர் வணபிதா. எ. ஜே. ஜேசுதாசன், பாடசாலையின் அதிபர் அருட் சகோதரி செபமாலை தயாநாயகி வணபிதா. எரிக்றொபின்சன் ஈ. பி. டி. பி. கட்சியின் தீவக அரசியல் அமைப்பாளர் ந. மதனராஜா ஆகியோர் படத்தில் உள்ளனர். *(படம்: ஊர்காவற்றுறை செய்தியாளர்)*



வயாவிளான் மத்திய மகாவித்தியாலய உயர்தர வகுப்பு மாணவர்களின் முயற்சியினால் 100 மாணவர் கதிரைகள் பாடசாலைக்கு கிடைத்துள்ளன.

அந்தக் கதிரைகளை உயர்தர மாணவர் மன்றத் தலைவர் வ. ரதீஸ்காந்த், வலிகாமம் கல்விவலய உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி றெஜினா இருதயநாதனிடம் வழங்கிய போது எடுக்கப்பட்ட படம்.

பாடசாலை அதிபர், ஆ. சி. நடராஜா, அருட்திரு. அருள்நேசன் அடிகள் ஆகியோரும் படத்தில் உள்ளனர். (ஐ-133)

*(படம்: புன்னாலைக்கட்டுவன் செய்தியாளர்)*

## 14 பணியாளர்கள் இடைநிறுத்தம்

அரியாலை, ஜன.8

நல்லூர் பல நோக்குக் கூட்டுறவுச்சங்கத்தில் பணியாற்றிய 14 அமைய ஊழியர்கள் கடந்த மாதம் 31 ஆம் திகதி தொடக்கம் பதவியிலிருந்து இடைநிறுத்தி வைக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

மேற்படி சங்கத்தின் கிளைகளில் கடமையாற்றிய விற்பனையாளர்களே இவ்வாறு பதவியில் இருந்து சங்க நிர்வாகத்தால் இடைநிறுத்தி வைக்கப்பட்டிருப்பதாக சங்க வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்த 14 விற்பனையாளர்களும் பதவியில் இருந்து இடைநிறுத்தி வைக்கப்பட்டிருப்பதால் சங்கக் கிளைகளில் கிளை முகாமையாளர்கள் பெரும் சிரமங்களை எதிர் கொண்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சில கிளைகளில் கிளை முகாமையாளர்களே விற்பனையாளரின் பணிகளையும் மேற்கொள்ளும நிலை ஏற்பட்டிருப்பதாக அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. (ஐ-17)

## இடமாற்றச்சபை கூட்டம்

குருநகர்,ஜன.8

யாழ்.கல்வி வலயங்களுக்கிடையிலான ஆசிரியர் இடமாற்றங்களினைத் தீர்மானிப்பதற்காக இடமாற்றச்சபைக் கூட்டம் எதிர்வரும் 18ஆம் திகதி வியாழககிழமை காலை 10.00 மணிக்கு நல்லூர் முத்திரைச்சந்தையில் அமைந்துள்ள யாழ்.மேலதிக மாகாண கல்விப் பணிப்பாளர் பணிமனையில் யாழ்.மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் கலாநிதி ச.நா.தணிகாசலம்பிள்ளை தலைமையில் நடைபெறவுள்ளது.

வலயத்திற்குத் தேவையான ஆசிரியர் விவரங்களை பாடரீதியாகவும், வலயத்திலுள்ள ஆசிரியர் எண்ணிக்கைகளை பாடரீதியாகவும், வலயத்தில் மேலதிகமாக உள்ள ஆசிரியர் எண்ணிக்கைகளை பாடரீதியாகவும், வலயத்திலிருந்து விடுவிக்கக்கூடிய ஆசிரியர் விவரங்களை பாடரீதியாகவும், ஆசிரியர்கள் எந்த அடிப்படையில் விடுவிக்கப்படுகின்றார்கள் போன்ற விவரங்களையும் இம்மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக யாழ்.மேலதிக மாகாணக் கல்விப் பணிமனைக்கு அனுப்பி வைக்குமாறு சகல வலயக் கல்விப் பணிப்பாளர்களையும் யாழ். மேலதிக மாகாணக்கல்விப் பணிமனை கோரியுள்ளது. (ஐ-51)

## சமுர்த்தி செயலணிக் கூட்டம்

யாழ்ப்பாணம்,ஜன.8

நல்லூர் பிரதேச செயலர் பிரிவைச் சேர்ந்த J/108 நல்லூர் தெற்கு கிராம அலுவலர் பிரிவில் சமுர்த்தி செயலணி அமைக்கும் கூட்டம் நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணிக்கு சமுர்த்தி முகாமையாளர் ந.சிவகுமார் தலைமையில் நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக நல்லூர் பிரதேச செயலர் க.குணராசா கலந்து கொள்ள உள்ளார். 18 வயதுக்கும் 35 வயதுக்கும் இடையிலான நல்லூர் தெற்குப் பகுதிகளைச் சேர்ந்த இளைஞர், யுவதிகளைக் கலந்து கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-10)

## புலிகள் தரப்பில் இருவர் மரணம்

வவுனியா,ஜன.8

படையினருடன் இடம்பெற்ற மோதல் சம்பவங்களில் தமது தரப்பில் உயிரிழந்த இருவரின் பெயர் விவரங்களை புலிகள் அறிவித்துள்ளனர்.

கடந்த வருடம் ஓகஸ்ட் மாதம் 12 ஆம் திகதி அம்பாறையில் ஏற்பட்ட வெடிவிபத்தின் போது காயமடைந்திருந்த மேஜர் மோகன் (கதிரவேலு குலரஞ்சன் - மட்டக்களப்பு) என்பவரும் -

கடந்த 4 ஆம் திகதி பாலமோட்டைப் பகுதியில் படையினர் மேற்கொண்ட ஷெல் தாக்குதலில் காயமடைந்த எல்லைப்படை வீரரான வீரவேங்கை துரைராசா தினேஸ்குமார் (கொழும்பு) என்பவருமே உயிரிழந்தவர்களாவர். (உ-6)

# காலாவதியான பொருள்கள் அழிப்பு

சண்டிலிப்பாய், ஜன. 8
மானிப்பாய், ஆனைக்கோட்டை ஆகிய பகுதிகளிலுள்ள கடைகளில் சுகாதார அதிகாரிகள் குழு நடத்திய திடீர்ப் பரிசோதனையின் போது திகதி காலாவதியான பிஸ்கட், ரின்பால், பப்படம் ஆகியன உட்பட பல பொருள்கள் கைப்பற்றப்பட்டு அழிக்கப்பட்டன.

மானிப்பாய் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் க. வருணநாதன், ஆனைக்கோட்டை பொதுச்சுகாதாரப் பரிசோதகர் வி. தயாமோகன் ஆகியோர் கடந்த வாரம் மேற்கொண்ட திடீர்ப் பரிசோதனையின் போதே மேற்படி திகதி காலாவதியான பொருள்கள் கைப்பற்றப்பட்டு அழிக்கப்பட்டன. திகதி காலாவதியான பொருள்களை விற்க வேண்டாம் என்று வர்த்தகர்கள் அறிவுறுத்தப்பட்டனர். (ஐ-153)

# பாராட்டி வாழ்த்துகின்றோம்

எமது கோண்டாவில் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்க வளர்ச்சிக்கு பல வழிகளிலும் உதவிகள் புரிந்த

## உயர்திரு. மு. பாக்கியநாதன் (B.A)

அவர்கள் மீண்டும்பனை அபிவிருத்திச் சபைத் தலைவராக நியமனம் பெற்றதையிட்டு எமது சங்கத்தின் சார்பில் பாராட்டுக்களையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

இவரை தலைவராக நியமனம் செய்த ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின்
கௌரவ செயலாளரும் வடக்கு அபிவிருத்திப் புனரமைப்பு புனர்வாழ்வு, வடக்கு — கிழக்கு தமிழ் விவகார இந்து கலாசார அமைச்சருமான

மாண்புமிகு கௌரவ
## K. N. டக்ளஸ் தேவானந்தா

அவர்களுக்கும் எமது சங்கத்தின் சார்பில் நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

பணிப்பாளர்கள், பணியாளர்கள்,
கோண்டாவில் பனை தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்.
K.K S. வீதி, தாவடிச்சந்தி,
(கற்பகதரு) (சி/14673)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி நாகரத்தினம் சற்குணம்

சங்குவேலியைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி நாகரத்தினம் சற்குணம் நேற்று (7- 1- 2001) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

இவர் காலஞ்சென்ற தம்பு சற்குணத்தின் (தபால் போஸ்ட்மன், பளை) அன்பு மனைவியும், தவசிலன், விக்னேஸ்வரமூர்த்தி(சிவா) (முன்னாள் மஸ்கன், தற்போது புனர்வாழ்வு பாதுகாப்பு உத்தியோகத்தர், கோண்டாவில்) ஆகியோரின் தாயாரும் காலஞ்சென்ற பூரணம் மற்றும் சிவபாக்கியத்தின் அன்புச் சகோதரியும் இ. புஸ்பராணியின் சிறிய தாயாரும் காலஞ்சென்ற பாஸ்கரதேவி மற்றும் நே. பராசக்தி ந. இராசேந்திரம் ஆகியோரின் மாமியாரும் சாலினி, சராங்கன் சாருமதி, சாருயன் ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (8-1-2001) திங்கட்கிழமை முற்பகல் 11. 00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக மானிப்பாய் பிப்பிலி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
ச. விக்னேஸ்வரமூர்த்தி (சிவா)
(மகன்)
பிள்ளையார் வளவு,
சுதுமலை வடக்கு,
மானிப்பாய். (82691)

## திருமதி இராசதுரை அருந்தவம்

காங்கேசன்துறையைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி இராசதுரை அருந்தவம் அவர்கள் நேற்று (07 - 01 - 2001) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இராசதுரையின் அன்பு மனைவியும், வசந்தன் (ஜேர்மனி), வாசுகி (ஜேர்மனி), வசுமதி (சுவிஸ்), வற்சலா (ஜேர்மனி), வனிதா (யாழ். செயலகம், புள்ளி விவரக் கிளை), வாகினி (U. K) ஆகியோரின் அன்புத் தாயாரும், விஜயதர்சினி, மோகன், ரவீந்திரன், ஆனந்தலிங்கம், சதீசன் (யாழ். பல்கலைக்கழகம் — பௌதிகத்துறை), முருகதாஸ் ஆகியோரின் பாசமிகு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (08 - 01 - 2001) திங்கட்கிழமை காலை 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டுத் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
S. சதீசன்
(மருமகன்)
35/2 A, குமாரசாமி வீதி,
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம். (82701)

# சமய சந்நிதிகளில்

வடமராட்சி, ஜன. 8
மேலைப்புலோலி தம்பசிட்டி ஸ்ரீமகாமாரி(பண்டாரி) அம்மன் கோயில் நாளை செவ்வாய்க்கிழமை காலை முதல் திருவாசக முற்றோதல் நடைபெறும். (ஐ-173)

★ ★ ★

யாழ்ப்பாணம், ஜன. 8
யாழ்ப்பாணம் கந்தர் மடம் ஆத்தி சூடி வீதி ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயத்தில் நாளை செவ்வாய்க்கிழமை திருவாதிரை விழா அகில இலங்கை திருமுறை மன்றத்தின் ஏற்பாட்டில் நடைபெறும்.

இந்நிகழ்வில் அகத்தியர் தேவாரத் திரட்டு முற்றோதல், பன்னிரு திருமுறைப் பாராயணம் என்பன விசேடமாக இடம்பெறும். (ஐ-173)

★ ★ ★

யாழ்ப்பாணம், ஜன. 8
வண். வடமேற்கு ஆனைக்கோட்டை ஸ்ரீ கண்ணகை அம்பாள் ஆலய திருவெம்பாவை திருவாதிரை உற்சவம் நாளை செவ்வாய்க்கிழமை காலை நடைபெறவுள்ளது.

திருவாதிரை உற்சவ அபிஷேக ஆராதனைகளுடன் அம்பாள் உள்வீதி புலாவும் நாளை நடைபெறவுள்ளது.

திருவெம்பாவை உற்சவம் கடந்த 31 ஆம் திகதி தொடக்கம் மேற்படி ஆலயத்தில் நடைபெற்று வருகிறது. [ஐ-5]

★ ★ ★

கோப்பாய், ஜன. 8
கோப்பாய் வடக்கு கண்ணகை அம்மன் ஆலய திருவெம்பாவை பூஜையின் இறுதி நிகழ்வுகளாக இன்று திங்கட்கிழமை மாலை 4 மணிக்கு அம்மன் மஞ்சத்தில் வீதி உலா வரும் நிகழ்வும் மறுநாள் செவ்வாய்க்கிழமை தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும். [ஐ-72]

★ ★ ★

வலிகாமம் மேற்கு, ஜன. 8
அருள்மிகு சித்தன்கேணி சிவகாமி சமேத சிவசிதம்பரேஸ்வரர் ஆலயத்தின் மார்கழித் திருவெம்பாவை உற்சவ பஞ்சரதபவனி இன்று திங்கட்கிழமை இடம்பெறவுள்ளது.

இன்றைய தினம் காலை 8 மணிக்கு பூவசந்த மண்டபப் பூசை இடம்பெற்று விநாயகப் பெருமான் நடராசர் சிவகாமி அம்மை முருகம் பெருமான மாணிக்கவாசகர் தனித்தனி தேர்களில் பவனிவரவுள்ளனர். நாளை செவ்வாய்க்கிழமை அதிகாலை 3 மணிக்கு நடராஜப் பெருமானுக்கு அபிஷேகம் நடைபெறவுள்ளது. (ஐ-175)

# சமுர்த்தி செயலணி

யாழ்ப்பாணம், ஜன. 8
நல்லூர் பிரதேச செயலர் பிரிவைச் சேர்ந்த திருநெல்வேலி தென் கிழக்கு (J/112), நல்லூர் வடக்கு (J/106) ஆகிய இரு கிராம அலுவலர் பிரிவுகளிலும் சமுர்த்தி செயலணி அமைக்கும் கூட்டம் நாளை செவ்வாய்க்கிழமை முற்பகல் 9. 30 மணிக்கு செங்குந்த இந்துக் கல்லூரியில் சமுர்த்தி முகாமையாளர் ந. சிவகுமார் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக நல்லூர் பிரதேச செயலர் க. குணராசா கலந்து கொள்வார்.

மேற்படி இரு கிராம அலுவலர் பிரிவுகளையும் சேர்ந்த 18 வயதுக்கும் 35 வயதுக்கும் இடையிலான இளைஞர், யுவதிகளைக் கலந்து கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-10)

# பாராட்டி வாழ்த்துகிறோம்

சிறுப்பிட்டி ஞானவைரவர் கோயில் பரிபாலன சபையினரும் அடியார்களும்

## பிரம்மஸ்ரீ க. ஜெயராமக் குருக்கள்

அவர்களின் சேவையைப் பாராட்டி
நாளை (9-1-2001) நடைபெறும் கௌரவிப்பு விழா அனைவருக்கும் மகிழ்ச்சியானதாகும். இந்த உபசார விழாவை நிகழ்த்தும் பரிபாலன சபையினரும் அடியார்களும் உபசரிப்புப் பெறும் குருக்கள் ஐயா அவர்களும் சிறப்புடன் வாழ வைரவப் பெருமானைப் பிரார்த்தித்து மகிழ்வுறுகிறோம்.

சிவஸ்ரீ ச. ஸ்ரீகாந்தக் குருக்கள்
சுபாங்கினி

சிவஸ்ரீ ச. லம்போதர குமாரசாமிக் குருக்கள்
கார்த்திகா

கதிரமலைச்சிவன் தேவஸ்தானம்,
சுன்னாகம். (82690)

உ
நயினை நாகபூஷணி அம்மன் துணை
கந்தரோடை, சின்னக்குளத்தடி
அருள்மிகு

# நயினை நாகபூஷணி அம்மன் ஆலயம்

# அறிவித்தல்

அம்மன் அடியார்களே!

கந்தரோடை, சின்னக்குளத்தடியில் அமர்ந்து அருள்பாலிக்கும் நயினை நாகபூஷணி அம்மனுக்குத் திருக்கோயில் அமைக்கவென எம்மால் வெளியிடப்பட்டுள்ள ரிக்கட்டுக்களைப் போன்ற சில வாசகங்களை உடையதும், போலியானதுமான ரிக்கட்டுகள் சில ஏமாற்றுப் பேர்வழிகளால் விற்பனை செய்யப்படுவதை 20 - 12 - 2000 ஆம் நாள் உதயன் பத்திரிகையில் வெளியிடப்பட்ட சி/14356 இலக்கத்தை உடைய நயினை நாகபூஷணி அம்மன் கோயில், நயினாதீவு அறங்காவலர் சபையின் விளம்பரம் மூலம் அறிந்து கொண்டோம். மேலும் 23 - 12 - 2000 ஆம் நாள் நயினாதீவு சென்று அறங்காவலர் காட்டிய ரிக்கட்டுடன் எமது ரிக்கட்டினையும் ஒப்பிட்டுப்பார்த்த போது அவை றோஸ் நிறத்தில் அச்சிடப்பட்டிருந்தன.

எமது ரிக்கட்டுகள் எதுவும் றோஸ்நிறத்தில் அச்சிடப்படவில்லை. அவை நீலம், வெள்ளை, மஞ்சள் நிறங்களிலேயே அச்சிடப்பட்டுள்ளன. மேலும் இடது பக்க மேல் மூலையில் அருள்பாலிக்கும் அம்பாளின் படம் உள்ளது. நயினாதீவு நாகபூஷணி அம்மன் ஆலயம் பயன்படுத்தும் ஐந்து தலை நாகத்தின் கீழ் இருக்கும் சிவலிங்கத்துடன் கூடிய அம்பாள் படத்தைப் போட்டால் நாங்கள் நயினாதீவு ஆலயத்தின் பேரில் போலியாக ரிக்கட் அச்சிட்டதாகக் கூறக்கூடும் என்பதனாலேயே நயினைநாகபூஷணி அம்மனைத் தனி அம்மன் உருவமாக வெளியிட்டதுடன் தாயார் புனித நாகேஸ்வரி, சின்னக்குளத்தடி, கந்தரோடை என்ற முகவரியும் இடப்பட்டது. அத்துடன் எமது ரிக்கட்டுகளின் இடது பக்க கீழ் மூலையில் அன்பளிப்பு ரூ. 50/- என்பது பெட்டி அமைப்பிற்குள் இடப்பட்டுள்ளது. பத்திரிகையில் வெளியான ரிக்கட்டில் அம்பாளின் படம் இல்லை. ''அம்பாள் துணை'' என்பதுவும் இல்லை. அதேவேளை தொடர் இலக்கமும் எமது ரிக்கட்டுகளில் உள்ளதற்கு எதிர்மாறாகவே உள்ளது (இடது பக்கத்தில்) திருப்பணி நிதியும் நடுவில் போடப்பட்டுள்ளது. மேலும் வலது பக்கத்தின் கீழ் தாயார் புனித நாகேஸ்வரி என்பதன் கீழ் சின்னக்குளத்தடி, கந்தரோடை, சுன்னாகம் என்ற முகவரி உள்ளது. மாறாகப் போலி ரிக்கட்டின் வலது பக்கம் கீழே தாயார் புனித நாகேஸ்வரி என்றும் இடதுபக்க கீழ் மூலையிலேயே சின்னக்குளத்தடி, கந்தரோடை, சுன்னாகம் என்ற முகவரியும் இடப்பட்டுள்ளது.

மேலும் எம்மால் ரூ 50/-ரிக்கட்டுகள் 001 தொடக்கம் 750 வரை மாத்திரமே அச்சிடப்பட்டுள்ளது. ஆனால் பத்திரிகையில் உள்ள 50-/ ரிக்கட் 3770 என்ற இலக்கமுள்ளது. இதன்மூலம் போலி ரிக்கட்டுக்கள் விற்பனையாவதை அறியமுடிகின்றது. அத்துடன் தாயார் புனித நாகேஸ்வரி என அன்பாக அடியவர்களால் அழைக்கப்படும் எனது பெயருக்குக் களங்கம் ஏற்படுத்த முயல்கின்றனர் என்பதனை மிக மன வருத்தத்துடன் அறியத்தருகின்றேன். கந்தரோடை— சின்னக்குளத்தடியில் அமையும் நயினை நாகபூஷணி அம்மன் ஆலயத்துக்கே இந்த நிதி செலவிடப்படுமென்பதையும் உறுதிப்படுத்துகின்றேன். வருங்காலத்திலும் போலிகளால் ஏமாறாதிருக்க வழங்கப்படவிருக்கும் ரிக்கட்டுக்களின் மேற்பகுதியில் ''இறப்பர் முத்திரை மூலம்'' கந்தரோடை என்றபதம் பொறிக்கப்பட்டிருக்கும் என்பதனையும் அறியத்தருகின்றேன். போலிரிக்கட்டுக்கள் பற்றி விளம்பரப்படுத்திய நயினை நாகபூஷணி அம்மன் கோயில் — நயினாதீவு அறங்காவலர் சபையினருக்கு நன்றி கூறுகின்றேன்.

தாயார் புனித நாகேஸ்வரி,
நயினை நாகபூஷணி அம்மன் ஆலயம்,
கந்தரோடை.

சின்னக்குளத்தடி,
கந்தரோடை,
சுன்னாகம். (82700)

# தீவகத்துக்கு நியமனம் பெறும் 17 பட்டதாரி பயிலுநர் ஆசிரியர்

யாழ். மாவட்டத்தில் தற்போது பட்டதாரி பயிலுநர் ஆசிரியர் நியமனம் வழங்கப்பட்டுள்ள 57 பேரில் தீவக கல்வி வலயத்துக்கென நியமனம் செய்யப்பட்ட 17 பேரின் பெயர் விவரம் வருமாறு:-

❖ அனுஜா சிவஞான சுந்தரம் (புங்குடுதீவு சுப்பிரமணிய மகளிர் வித்தியாலயம்)
❖ வத்சலா தற்பரன் (வேலணை சைவப்பிரகாச வித்தி.)
❖ வசந்தி ஜெயக்குமார் (வேலணை கிழக்கு ம.வி.)
❖ திருமதி ரூபினிரவீந்திரன் (புங்குடுதீவு கமலாம்பிகை வித்தி.)
❖ முருகேசு திவ்வியபாலன் (புங்குடுதீவு கமலாம்பிகை வித்தி.)
❖ இராசரத்தினம் சுப்பிரமணியம் (அல்லைப்பிட்டி பராசக்தி வித்தி.)
❖ இராசையா யோகேஸ்வரன் (சேர் வைத்திலிங்கம் துரைசுவாமி ம.ம.வி.)
❖ பூரணி வெற்றிவேலு (சேர் வைத்திலிங்கம் துரைசுவாமி ம.ம.வி.)
❖ வசந்தா மகாலிங்கம் (யாழ்ற்றன் கல்லூரி)
❖ சிவகௌரி சிவரூபன் (யாழ்ற்றன் கல்லூரி)
❖ எதிர் வீரசிங்கம் செல்வகுமாரன (காரைநகர் சுந்தரமூர்த்தி வித்தி.)
❖ பங்கயச் செல்வி நடராஜா (காரைநகர் சுந்தரமூர்த்தி வித்தி.)
❖ திருமதி ச.கருணாநிதி (காரைநகர் சுந்தரமூர்த்தி வித்தி.)
❖ பாலகௌரி பாலசுப்பிரமணியம் (கலாநிதி ஆ.தியாகராஜா ம.ம.வி.)
❖ கனகரத்தினம் ஜனனி (கலாநிதி ஆ.தியாகராஜா ம.ம.வி.)
❖ வி.இராசதுரை (கலாநிதி ஆ.தியாகராஜா ம.ம.வி.)
❖ வேதநாயகம் மேரி புஸ்பலதா (கலாநிதி ஆ.தியாகராஜா ம.ம.வி.)

கடந்த 2ஆம் திகதியில் இருந்து இவர்களுக்கான நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன. இவர்கள் தமது நியமனக் கடிதங்களை தீவக கல்வி வலயத்தில இன்று திங்கட்கிழமை தொடக்கம் நேரில் வந்து பெற்றுக் கொள்ளலாம் என்று தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் பி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார். (உ-10)

# கல்வியியல் கல்லூரி நேர்முகப் பரீட்சை

யாழ்ப்பாணம்,ஜன.8

யாழ். கல்வியியல் கல்லூரிக்கு மாணவர்களை அனுமதிப்பதற்கான நேர்முகப் பரீட்சைகள் நாளை மறுதினம் புதன்கிழமையே ஆரம்பமாக வுருக்கின்றன என்று அதன் பீடாதிபதி தி.கமலநாதன் அறிவித்துள்ளார்.

இந்த நேர்முகப் பரீட்சைகள் நாளை ஆரம்பிக்கப்படவிருக்கின்றன என்று முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது.

நாளை மறுதினம் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டவர்களுக்கு எதிர்வரும் 12ஆம் திகதி பரீட்சை இடம் பெறும் என்றும்-

நாளை மறுதினம் அழைக்கப்பட்டவர்களுக்கான பரீட்சையில் மாற்றம் இல்லை என்றும்- அவர் மேலும் சொன்னார்.

இந்தப் பரீட்சைகள் வவுனியா கல்வியியல் கல்லூரி பீடாதிபதி எஸ். அழகரத்தினம் தலைமையிலான குழுவால் யாழ்கல்விவலய அலுவலகத்தில் நடத்தப்படும்.

98ஆம் ஆண்டுக்கு முன்னர் ஜி.சீ.ஈ. (உயர்தர) பரீட்சைக்குத் தோற்றியவர்கள் வெட்டுப்புள்ளி அடிப்படையில் அனுமதிக்குத் தேர்ந்தெடுக்கப் படுவர் என்றும்-

நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டவர்களுக்கான கடிதங்கள் தபாலில் அனுப்பப்பட்டுள்ளன என்றும்- தெரிவிக்கப்பட்டது. (உ-3-5)

# சமாதான நீதிவான் வீட்டு பெயர்ப் பலகை கிணற்றுக்குள்!

நெல்லியடி,ஜன.8

சமாதான நீதிவான் ஒருவரின் வீட்டு வாயிலிலிருந்து, இனந்தெரியாத நபர்களினால் பிடுங்கி எடுத்துச் செல்லப்பட்ட, அவரது பெயர்ப்பலகை, மறுநாள் காலை அப்பகுதியில் உள்ள கிணறு ஒன்றிலிருந்து பொலீஸாரினால் மீட்கப்பட்டுள்ளது.

இச் சம்பவம் அண்மையில் உடுப்பிட்டி சந்தை வீதியில் உள்ள ஒரு வீட்டில் இடம்பெற்றது.

இது குறித்து, வல்வெட்டித்துறை பொலீஸ் நிலையத்தில் புகாரிடப்பட்டதையடுத்து விசாரணைகளை நடத்திய வல்வெட்டித்துறை பொலீஸார், இது தொடர்பாக உடுப்பிட்டிப் பகுதியிலுள்ள உயர்தர வகுப்பு மாணவர் சிலரைக் கைது செய்ததையடுத்து, அப்பெயர்ப் பலகை பின்னர் வேறொரு கிணற்றிலிருந்து மீட்கப்பட்டு, உரியவரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (ஐ-109)


## "நாடி" வெளியீட்டு விழாவும் மருத்துவ மாணவர் ஒன்றியத்தின் 20ஆம் ஆண்டு நிறைவு விழாவும்

இடம் : யாழ்.கைலாசபதி கலையரங்கம்
காலம் : நாளை (09.01.2001) பிற்பகல் 2.30மணி
பிரதம விருந்தினர் : பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை (துணைவேந்தர், யாழ்.பல்கலைக்கழகம்.)
சிறப்பு விருந்தினர் : பேராசிரியர் செல்வி வசந்தி அரசரட்ணம், (பீடாதிபதி, மருத்துவபீடம்.)

**நிகழ்ச்சி நிரல்**

1. "நாடி" சஞ்சிகை வெளியீடு
2. கவியரங்கம்
3. நாடகம்
4. பட்டிமன்றம்

ஆர்வலர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

(82695) - மருத்துவ மாணவர் ஒன்றியம்.



## NEW SCIENCE HALL

கன்னாதிட்டி றோட், யாழ்ப்பாணம்.
A/L 2003
ENGLISH
S.மகேஸ்வரன்
J.H.College
ஆரம்பம்:- 09.01.2001 2.00 p.m.
(82692)


## பொலீஸ் அறிக்கை சமர்ப்பிக்கக் கோரிக்கை

சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்ற அங்கத்தவர்கள் மீளாய்வு செய்யப்பட்ட இழப்பீட்டுப் படிவத்திலுள்ள தொகைக்கேற்ற பொலீஸ் அறிக்கை இணைக்கப்பட வேண்டியுள்ளதால் அங்கத்தவர்கள் உடனடியாக அதற்கான படிவத்தினைப் பெற்று கொடிகாமம் பொலீஸ் நிலையத்தில் இழப்பீடு சம்பந்தமான முறைப்பாடு செய்து அதன் பிரதியினை மன்றில் ஒப்படைக்குமாறு மன்றச் செயலாளர் வ.இராசதுரை அறிவித்துள்ளார். (ஐ-117)

## கண்காட்சி நீடிப்பு

யாழ்ப்பாணம்,ஜன.8

யாழ்.வை.எம்.சி.ஏ. மண்டபத்தில் கடந்த சனிக்கிழமை ஆரம்பமான ஓவிய சுவரொட்டிக் கண்காட்சி இன்றும் நாளையும் தொடர்ந்து நடைபெறவுள்ளது.

சமாதானத்தை வலியுறுத்தும் சுவரொட்டிகளைக் கொண்ட இந்தக் கண்காட்சியை பெருமளவு மக்கள் கடந்த சனிக்கிழமை பார்வையிட்டனர். (உ-5)

## நூல் வெளியீடும் நிறைவு விழாவும்

யாழ்ப்பாணம்,ஜன.8

யாழ்மருத்துவ பீட மாணவர் ஒன்றியத்தின் 'நாடி' சஞ்சிகை வெளியீட்டு விழாவும் 20ஆம் ஆண்டு நிறைவு விழாவும் நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு கைலாசபதி கலையரங்கில் இடம் பெறவுள்ளன.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக துணை வேந்தர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளையும் சிறப்பு விருந்தினராக மருத்துவ பீடாதிபதி பேராசிரியர் செல்வி வசந்தி அரசரட்ணமும் கலந்து கொள்வர்.

கவியரங்கம், நாடகம், பட்டிமன்றம் என்பனவும் இதில் இடம் பெறும்.(-3)

## தாமதமின்றிச் செல்ல நடவடிக்கை

யாழ்ப்பாணம்,ஜன.8

காரைநகர் ஈழத்துச் சிதம்பரம் ஆலயத்தில் இடம் பெறும் திருவிழாவில் கலந்து கொள்ளச் செல்லும் பக்தர்கள் பொன்னாலை சோதனைச சாவடியில் தாமதம் இன்றிச் செல்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறு வலி மேற்குப் பிரதேச சபைத் தலைவர் ந.திரிலோகநாதன் காரைநகர் கடற்படை அதிகாரிகளிடம் கேட்டிருக்கிறார்.

பொன்னாலை சோதனைச் சாவடியில் சிரமங்களை அனுபவிக்க வேண்டியிருப்பதாக பக்தர்கள் சிலர் முறையிட்டதை அடுத்து அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் பணிப்பின் பேரில் திரிலோகநாதன் காரைநகருக்குச் சென்று நிலைமைகளைப் பார்வையிட்டார்.

பொன்னாலையில் பயணிகளை தாமதமின்றி விரைவாகச் சோதனை செய்து அப்பால் அனுப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாக காரைநகர் கடற்படையின் பொதுசனத் தொடர்பு அதிகாரி லெப்டினன்ட் ஹந்துங்கே தன்னிடம் கூறியுள்ளதாக திரிலோகநாதன் தெரிவித்தார். (ஐ)

## மெய்வன்மை சட்ட விதிகள் குறித்துப் பரீட்சை

யாழ்ப்பாணம்,ஜன.8

மெய்வன்மைச் சட்ட விதிகளில் தேர்ச்சி பெற்ற தொழில்நுட்ப அதிகாரிகளைத் தெரிவு செய்வதற்கும் மற்றும் தரம் உயர்த்துவதற்குமான பரீட்சைகளை ஸ்ரீலங்கா அமெச்சூர் மெய்வன்மைச் சங்கம் அடுத்த மாதம் 10 ஆம் திகதி நடத்தவுள்ளது.

இந்தப் பரீட்சைகளுக்கான விண்ணப்பங்களை எதிர்வரும் 10 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்ப வேண்டும் என்றும்-

மேலதிக விவரங்களையும், விண்ணப்பப் படிவங்களையும் யாழ். மாவட்ட அமெச்சூர் மெய்வன்மைச் சங்கத் தலைவர் கப்டன் என்.சோமசுந்தரத்துடன் 'அருண்' ஸ்போட்ஸ் ஸ்பொட்',348,கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் என்ற விலாசத்தில் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளலாம் என்றும்-

யாழ்.மாவட்ட அமெச்சூர் மெய்வன்மைச் சங்கம் அறிவித்துள்ளது.(உ-3)

## அதிபர்கள் கூட்டம்

யாழ்ப்பாணம்,ஜன.8

உடுவில் கோட்டத்தக்குட்பட்ட பாடசாலைகளின் அதிபர்களுக்கான கூட்டம் இன்று திங்கட்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு இராமநாதன் கல்லூரியில் இடம்பெறவுள்ளதாக உடுவில் உதவிக் கல்விப் பணிப்பாளர் அ.தற்பரானந்தன் தெரிவித்தார். (-3)

# வலைப்பந்தாட்ட சுற்றுப்போட்டி

யாழ்ப்பாணம்,ஜன.8

யாழ்.மாவட்ட வலைப்பந்தாட்டச் சங்கம் யாழ்.வர்த்தக வங்கியின் ஆதரவுடன் கழகங்களுக்கு இடையில நடத்தும் வலைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியின் முதற்சுற்று மற்றும் கால் இறுதி, அரையிறுதி ஆட்டங்கள் நாளை காலை 8.30 மணி முதல் யாழ்.மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளன.

இறுதியாட்டம் எதிர்வரும் 15 ஆம் திகதி பிற்பகல் 2.30 மணிக்கு நடைபெறும். இந்தச் சுற்றுப் போட்டியில் பத்துக் கழக அணிகள் பங்குபற்றுகின்றன. (உ)

# வழிகாட்டல் கருத்தரங்கில்

யாழ்ப்பாணம்,ஜன.8

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் அனுசரணையுடன் யாழ். இந்துக் கல்லூரியில் இடம்பெற்று வரும் இலங்கைக் கல்வி நிர்வாக சேவை தரம் 111 ற்கு ஆள்களைத் தெரிவு செய்வதற்கான போட்டிப் பரீட்சை வழிகாட்டல் கருத்தரங்கில் நாளைய இந்நிகழ்வில் மாகாணக் கல்விப் பணிப்பாளர் இ.சிவாணந்தன் கலந்து கொள்ளவிருக்கின்றார்.

இந்தக் கருத்தரங்கில் மேலதிக மாகாணக் கல்விப்பணிப்பாளர் கலாநிதி நா.தணிகாசலம்பிள்ளை, ஓய்வு பெற்ற அதிபர் அ.பஞ்சலிங்கம் ஆகியோரும் கலந்து கருத்துரை வழங்குவர்.

இந்தக் கருத்தரங்கின் 4 ஆவது விரிவுரைகள் எதிர்வரும் 13 ஆம் திகதி சனிக்கிழமை யாழ்.மத்திய கல்லூரியில் இடம்பெறும் என்று சங்கத்தின் சிரேஷ்ட துணைப் பொதுச செயலாளர் த.பஞ்சலிங்கம் தெரிவித்தார். (உ-3)

# ஆண் வேடமிட்டு இளம் யுவதியை மணம் புரிந்த பெண் சிக்கினார்!

## தெற்கில் பரபரப்பான சம்பவம்

கொழும்பு, ஜன.8

ஆண் வேடமிட்ட இளம் பெண் ஒருவர் புரிந்த அட்டகாசங்கள் தென் பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி இருக்கிறது.

கெலனியா ஆடைத் தொழிற்சாலை ஒன்றில் பல மாதங்களாக மேற்பார்வையாளராகப் பணிபுரிந்த ஆண் ஒருவருக்கும் அங்கு பணிபுரிந்த யுவதிக்கும் அண்மையில் திருமணம் நடைபெற்றது. திருமணம் நடந்த சில தினங்களிலே அந்த யுவதிக்கு அதிர்ச்சி காத்திருந்தது. தன்னை மணந்தவர் ஆண் அல்ல அவர் ஒரு பெண் என்பது தெரிய வந்தது. அதிர்ந்து போன அவர் தனது தொழிற்சாலை நிர்வாகத்துக்கு முறையிட்டார். அது குறித்து நிர்வாகம் பொலீஸாருக்கு அறிவித்ததுடன் வேடமிட்டு நாடகமாடிய பிரஸ்தாபப் பெண்ணை பொலீஸாரிடம் ஒப்படைத்தது.

ஏமாற்றுப் பேர்வழியான அந்த யுவதி இதற்கு முன்னரும் ஆண் வேடமிட்டு பல திருகுதாளங்களில் ஈடுபட்டவர் என்பது தெரிய வந்திருப்பதாக கெலனிப் பகுதி உதவிப் பொலீஸ் அத்தியட்சகர் சஜீவ தர்மரட்ண தெரிவித்துள்ளார்.

ஆணாக வேடமிட்ட இந்த யுவதி மீது காதல் கொண்ட பெண் ஒருவர் பின்னர் தன் காதலன் ஒரு பெண் என்பது தெரிய வரவே தற்கொலை செய்து கொண்டார் என்றும் கூறப்படுகிறது.

பார்வைக்கு வாட்ட சாட்டமான இளம் காளை போன்ற தோற்றத்தில் வேடமிட்டு உலாவிய இப்பெண் ஆணின் தோற்றத்தில் அடையாள அட்டைகளை வைத்திருந்ததாகவும் கூறப்படுகிறது. இவரிடமிருந்து பெருமளவு எண்ணிக்கையான காதல் கடிதங்களை பொலீஸார் மீட்டுள்ளனர். ஆண் வேடத்தில் இளம் பெண்களை மயக்கி அவர்களுடன் உல்லாசமாக இருப்பதே இந்த யுவதியின் பொழுது போக்காக இருந்து வந்துள்ளது. இவர் தன்னை ஆண் என்று கூறிக் கொண்டு வெளிநாடு சென்றும் தொழில் புரிந்து திரும்பியதும் தெரிய வந்துள்ளது.

பொலீஸாரால் கைது செய்யப்பட்ட இந்த யுவதி கடந்த வெள்ளியன்று நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டார். விசாரணைகள் தொடர்ந்து இடம் பெற்று வருகின்றன. (ஐ-ம)


உ

## வல்வை வாலாம்பிகா சமேத ஸ்ரீ வைத்தீஸ்வர சுவாமி தேவஸ்தான திருவாதிரை விழா

நாளை (09.01.2001) செவ்வாய்க்கிழமை அதிகாலை 4 மணியளவில் அபிஷேக ஆராதனைகள் இடம்பெற்று காலை 9 மணியளவில் சிறப்பு நிகழ்வாக யாழ்.பல்கலைக்கழக உதவி விரிவுரையாளர் ஸ்ரீதர்ஷனன் அவர்களின் இன்னிசைக் கச்சேரி சிறந்த பக்கவாத்திய சகிதம் நடைபெறும். தொடர்ந்து எம்பெருமானின் திருநடனக்காட்சி இடம்பெறும்.

(82685) ~ ஆதீனகர்த்தா.



## மரண அறிவித்தல்

### சங்கீத பூஷணம் விசுவலிங்கம் பரமலிங்கம்

(ஓய்வு பெற்ற ஆசிரியர், யா/பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரி)

மாதகல் மேற்கைப் பிறப்பிடமாகக் கொண்ட விசுவலிங்கம் பரமலிங்கம் அவர்கள் திருச்சியில் 05.01.2001 இல் காலமானார்.

அன்னார் காலஞ் சென்றவர்களான விசுவலிங்கம் சின்னப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மகனும், அம்பிகையம்மா, கண்டுமணி, காலஞ் சென்ற சிங்காரவேலு(உதவி அரசாங்க அதிபர், முல்லைத்தீவு) ஆகியோரின் அருமைச் சகோதரரும், காலஞ்சென்ற அப்புலிங்கம், காலஞ் சென்ற இராமசாமி, புவனேஸ்வரி ஆகியோரின் மைத்துனரும் புஷ்பம், லீலா, ஆனந்தபுவிராசா(கரும்புக்கிளி), பரம்சோதி, பூம்பா, மீரா, விமலராசா, அமுதா, சுமித்திரா, உமா, குமரகுருபரன், சுதா, தங்கக்குமரன், கிரிதரன் ஆகியோரின் அன்பு மாமனாரும், Dr.குமரவேள், தாரணி, காலஞ்சென்ற முருகவேள் ஆகியோரின் பாசமிகு பெரிய தந்தையாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் தமிழ்நாடு - திருச்சியில் நடைபெற்றன.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*39,குமாரசாமி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.* (C/14692)

தகவல்: Dr.சி.குமரவேள் (பெறாமகன்)

# சைவ நெறிக் கற்கைகள் நிலையம் யாழ்ப்பாணத்தில் விரைவில் இயங்கும்

யாழ்ப்பாணம்,ஜன.8

யாழ்ப்பாணத்தில் சைவநெறிக் கற்கைகள் நிலையத்தை விரைவில் ஆரம்பிப்பதற்கு ஆனைப்பந்தியில் உள்ள குருநாத வித்தியாசாலைக் கட்டடம் தற்காலிகமாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

வடபிராந்திய இந்துப் பேரவையினர் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுடன் நடத்திய பேச்சுக்களைத் தொடர்ந்து இந்த நிலையத்தை ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

சைவநெறிக் கற்கைகள் நிலையத்திற்கு நிரந்தரமான கட்டடம் அமைக்கப்படும் வரை இந்தப் பாடசாலை கட்டடத்தில் அது இயங்கும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சைவநெறிக் கற்கைகளை ஆரம்பிப்பதற்கு இலகுவாக கைவிடப்பட்ட நிலையில் உள்ள இந்தக் கட்டடம் திருத்தி அமைக்கப்பட்டு தளபாடமும் கொள்வனவு செய்வதற்குரிய நிதி வசதியை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வழங்குவதாக உறுதியளித்துள்ளார். (ஐ-6)

# சங்கானையில் பாதீனியம் களை ஒழிப்பு சிரமதானம்

வலிகாமம் மேற்கு,ஜன.8

சங்கானை நகரத்தை அண்டிய பகுதிகளில் வயல்நிலங்களிலும் வீதியோரங்களிலும் பெருந்தொகையாகக் காணப்பட்ட பாதீனியம் களைகள் முற்றாக அழிக்கப்பட்டன.

வலிகாமம் மேற்குப் பிரதேச செயலர் நா.வேதநாயகன் தலைமையில் பாதீனியம் களைகளை அகற்றும் சிரமதானப் பணி கடந்த வியாழனன்று மேற்கொள்ளப்பட்டது. சங்கானைப்பகுதி கிராம உத்தியோகத்தரினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த பாதீனியம் களை அகற்றும் பணியை பிரதேச செயலர் நா.வேதநாயகனும் திட்டமிடல் உதவிப் பணிப்பாளர் கே.தர்மராசாவும் மங்களவிளக்கேற்றியும் மண்வெட்டிகளினால் களைகளை அகற்றியும் ஆரம்பித்து வைத்தனர்.

இதனைத் தொடர்ந்து பொதுமக்களும் விவசாயிகளும், வர்த்தக சங்கப் பிரதிநிதிகளும் பாதீனியம் களைகளை அழிக்கும் பணியில் ஈடுபட்டனர். (ஐ-175)

# கல்வி வலயங்களுக்கிடையே உதைபந்தாட்டப் போட்டிகள்

வலி.வடக்கு,ஜன.8.

யாழ்.மாவட்ட கல்வி வலயங்களுக்கிடையே தெரிவு செய்யப்பட்ட பாடசாலை அணிகளுக்கு இடையிலான உதைபந்தாட்டப் போட்டிகள் இவ்வார இறுதியில் இருந்து ஆரம்பமாகவுள்ளன.

ஒவ்வொரு வலயத்தில் இருந்தும் 16, 18 வயது அணிகளில் முதலாம், இரண்டாம் இடங்களைப் பெற்ற அணிகள் மாவட்டப் போட்டியில் பங்குபற்றவுள்ளன.

### 18 வயதுப் பிரிவு

இப்பிரிவில் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி, யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி ஊர்காவற்துறை புனித அந்தோனியார் கல்லூரி, மானிப்பாய் இந்துக் கல்லூரி என்பன 'ஏ' பிரிவாகவும் - தெல்லிப்பழை யூனியன் கல்லூரி, வேலணை மத்திய கல்லூரி, நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம், யாழ்ப்பாணம் புனித சார்ள்ஸ் மகா வித்தியாலயம் என்பன 'B' பிரிவாகவும் வகுக்கப்பட்டுள்ளன.

### 16 வயதிற்கு உட்பட்டோர்

'ஏ' பிரிவில் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி, யாழ்.மத்திய கல்லூரி, ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி, பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி என்பனவும் -

'பி' பிரிவில் கந்தரோடை ஸ்கந்தவரோதயக் கல்லூரி, வேலணை மத்திய கல்லூரி, யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி, உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் வித்தியாலயம் என்பனவும் இடம்பெறுகின்றன. (ஐ-86)

### இடர்காலக் கொடுப்பனவு

யாழ்ப்பாணம்,ஜன.8

சாவகச்சேரி சக்தி அம்மன் பாடசாலை ஆசிரியர்களுக்கான இடர்காலக் கொடுப்பனவுகள் இன்றும் நாளையும் நெல்லியடி வதனி ஜுவல்லறியில் வைத்து வழங்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (உ-5)

### சுயநிர்ணய,...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

✪ இந்த எழுச்சி நிகழ்வினை 'பொங்கு தமிழ்' நிகழ்வாக நடத்துதல்.

✪ எதிர்வரும் புதன்கிழமை மாலை 3மணிக்கு பல்கலைக்கழக சமூகத்தால் நடத்தப்படும் சுயநிர்ணய உரிமையை வலியுறுத்தும் எழுச்சி நிகழ்வில் மனிதநேய அமைப்புக்களின் ஒன்றியத்தில் இணைந்துள்ள 47 அமைப்புக்களின் பிரதிநிதிகளும் கலந்து கொள்ளவேண்டும்.

-இவ்வாறு பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

தமிழர்களின் சுயநிர்ணய உரிமைக்கான மக்கள் எழுச்சி நிகழ்வில் குடாநாட்டிலுள்ள மக்கள் அனைவரையும் இணைந்துகொள்ளுமாறு மனிதநேய அமைப்புக்களின ஒன்றியம் கோரிக்கை விடுத்துள்ளது.

இதேவேளை தமிழர்களின் சுயநிர்ணய உரிமை,தமிழர்களின் அபிலாஷை ஆகியவை குறித்து பல்கலைக்கழக சமூகத்தினர் கிராமம் கிராமமாகச் சென்று விழிப்புணர்வு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர். (உ-5)

### அரசின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் முதலில் ஜனாதிபதியுடன் பேச்சு நடத்துவார் என்றும் -

அதன் பின்னர் வன்னி சென்று விடுதலைப் புலிகள் தலைவர் வே. பிரபாகரனுடன் பேச்சு நடத்துவார் என்றும் -

அரச சார்பு "சண்டே ஒப்சேவர்" பத்திரிகை நேற்றுச் செய்தி வெளியிட்டுள்ளது. (உ-3)

### அரச....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இவ்விரு விடயங்களும் முக்கியமாக ஆராயப்பட இருப்பதாக அரசதரப்பு அறிவித்துள்ளது.

பாரிஸில் இடம்பெற்ற உதவி வழங்கும் நாடுகளின் கூட்டம் தொடர்பாக நாடாளுமன்றத்தில் நாளை மறுதினம் இடம்பெறும் விவாதத்தில் அரசதரப்பில் சமர்ப்பிக்கப்படவுள்ள அறிக்கை தொடர்பாகவும் இக் கூட்டத்தில் ஆராயப்படவிருக்கிறது. (உ-3)

### மின் உபகர....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவற்றை நேரத்துடனேயே ஒப்படைத்து அனுமதி பெற்றே எடுத்துச் செல்ல வேண்டும் என்றும்-

அவ்வாறு அனுமதி பெறாமல் எடுத்துச் செல்லப்படும் பொருள்கள்- தெல்லிப்பழை சோதனை நிலையத்தில் வைத்துத் திருப்பி அனுப்பப்படும் என்றும்- அறிவிக்கப்பட்டுள்ளது.

### 1250 பயணி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதேசமயம் ஆயிரத்து 100 பயணிகளுடன் நேற்றுமுன்தினம் திருமலையிலிருந்து புறப்பட்ட 'லங்கா முடித்த' கப்பல் நேற்று மாலையே காங்கேசன்துறையை வந்தடைந்தது என்றும்-

அதில் வந்த பயணிகள் ஊரடங்கு காரணமாக தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலயத்தில் நேற்றிரவு தங்க வைக்கப்பட்டிருந்தனர் என்றும் -

இன்று காலை அவர்கள் யாழ். பஸ் நிலையத்துக்குக் கூட்டிவந்து விடப்படுவர் என்றும் - தெரிவிக்கப்பட்டது. (உ-3)


யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி
பழைய மாணவர் சங்கம்
நடத்தும்
முழுநிலா நாள் கருத்தரங்கு

இடம் : யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி குமாரசுவாமி மண்டபம்
காலம் : நாளை (09.01.2001) செவ்வாய்க்கிழமை
நேரம் : பிற்பகல் 3.30 மணி (புதிய நேரம்)
தலைமை : திரு.க.சி.குகதாசன் (முன்னாள் அதிபர், யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி)
தலைப்பு : "உடுக்களின் பரிணாம வளர்ச்சி"
கருத்துரை : பேராசிரியர் க.கந்தசாமி (தலைவர், பௌதிகவியல் துறை, யாழ்.பல்கலைக்கழகம்)

அனைவரும் வருக!

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி
பழைய மாணவர் சங்கம்.

ஆதரவு:- சுடர் ஒளி
(வாசிக்கும் நெஞ்சங்களை யோசிக்க வைக்கும் ஒரே பத்திரிகை) (C/14689)



IBMS இன்
மாபெரும் புலமைப்பரிசில் 2001

மேற்படி தெரிவுப் பரீட்சை (பொது அறிவு, நுண்ணறிவு) 09-01-2001 செவ்வாய்க்கிழமை 10.00 a.m. (S.L.T.) நடைபெற உள்ளதால் பரீட்சார்த்திகளின் அனுமதி அட்டைகள் தபாலில் சேர்க்கப்பட்டுள்ளன. இன்று (08.01.2001) திங்கட்கிழமை வரை அனுமதி அட்டைகள் கிடைக்கப்பெறாதவர்கள் தலைமைக் காரியாலயத்துடன் நேரடியாகத் தொடர்பு கொள்ளவும்.

Director(Ad)
Institute of Business Management Studies
IBMS
No. 701, K.K.S.Road, Jaffna.
Tele. 021-3165
e.mail: ibms jaffna @ yahoo. com
ibms jaffna @ ultavista.com (C/14693)



விக்னா கல்வி நிறுவனம்
பிரிவு I
O/L DAY CLASS
ஆரம்பம் : 10.01.2001 (8.30 - 2.00)
Sat/sun O/L
புதிய பிரிவு I
ஆரம்பம்:14.01.2001 9மணி
(82636)



சிங்களம்
இலகுவாக, அழகாகப் பேச, எழுத வாசிக்க துரிதமான முறையில் பயிற்சி அளிக்கப்படும்
K.R.சூரி
ஆரம்பம்: ஜனவரி 13 பி.ப.2 மணி
DMI யாழ்நகர்
(82389)



மாபெரும் மலிவு விற்பனை
பாடசாலை மாணவர்களின் நலன் கருதி
* அப்பியாசக் கொப்பிகள் * பாடசாலை உபகரணங்கள்
சேவை நோக்கில் மலிவு விலையில் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.
இடம் : புனித மரியன்னை பேராலயம் (ஆயர் இல்லம் முன்பாக)
காலம் : 01.01.2001 முதல் 20.01.2001 வரை
இளைஞர் உருவாக்கல் இயக்கம் யா/பேராலயம்
(82541)
விளம்பர அன்பளிப்பு:
மங்கள வைபவங்களுக்கான வாடகைப் பொருள் பெறுமிடம்
"லொயலாஸ்"
195,பிரதான வீதி, 4ஆம் குறுக்குத் தெரு சந்தி, யாழ்ப்பாணம்.



உளவியல் கருத்தரங்கு
பொருள் : "நெருக்கீடுகள் தனிநபரில் ஏற்படுத்தும் தாக்கம்"
கருத்துரை வழங்குபவர் : திரு.N.கனகரத்தினம் (பிரதம தாதிய பரிபாலகர், போதனா வைத்தியசாலை)
காலம் : நாளை (09.01.2001) செவ்வாய்க்கிழமை
நேரம் : பிற்பகல் 3.30 மணி (இ.நே.)
இடம் : "அகவொளி" குடும்ப வளத்துணை நிலையம், 131, பாங்சால் வீதி, யாழ்ப்பாணம்.
இதில் கலந்து பயன் பெற அன்புடன் அழைக்கிறோம்.
(82638) - இயக்குநர்.



A/L 2003
முன்னணி நிறுவனங்களில்
இந்து நாகரிகம்
ப.ஜோதீஸ்வரன் (B.A Dip.in.Ed)
● DMI - யாழ்நகர்
● பொருளியல் கல்லூரி - யாழ்ப்பாணம்
● NEW BEACON - ஆவரங்கால்
● மொடேன் - நெல்லியடி
● மொடேன் - பருத்தித்துறை
● BEACON - உடுப்பிட்டி
(82391)



STP Computer World
54A, Palaly Road, Kantharmadam, Jaffna
O/L பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களுக்கான 10 நாள் இலவச Computer வகுப்புக்கள்
O/L மாணவர்களுக்கான இலவச பயிற்சி நெறி
3வது புதிய பிரிவு ஆரம்பம் 10-01-2001 - புதன்கிழமை காலை 9.00 மணிக்கு.
STP Computer World
பதிவுகளை முன்கூட்டியே உறுதிப்படுத்தவும்
Director
STP Computer World


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 08.01.2001 இல் அச்சிட்டு வெளியிடப் பெற்றது.